440

440

GEOGRAPHY

North Arcot District



3180

E. M. GOPALAKRISHNA KONE

MADURA. MADRAS.

வட ஆற்காடு ஜில்லா பூகோளம்

915.482 [T]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 JAN 1939
MADRAS

வி. சுப்புரத்னம் அய்யர், பி. ஏ., எல். டி.,

பூகோள ஆசிரியர்,

இஸ்லாமியா ஹைஸ்கூல்,

மேல் விஷாரம்.

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்

மதுரை : : சென்னை

1938

[விலை அணா 0—5—0.

ரிஜிஸ்தர் செய்தது]

First Edition—1938

முகவுரை.

இச்சிறு புத்தகம் நான்காவது வகுப்பு மாணவர்களுக்காக எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. சில காலமாக நமது மாகாணத்தில் பூகோள சாஸ்திரப்பயிற்சி முன்னேற்றமடைந்து வருகின்றது. இதை யொட்டியே இப்புத்தகம் புதிய நடையில் எழுதப்பட்டுள்ளது.

பூகோள சாஸ்திர நிபுணரான வாலிஸ் என்பவர் சொல்லுவதுபோல், பூகோள சாஸ்திரமாவது, மனிதன் எப்படி இயற்கையின் சக்தியை ஜெயித்து, பூமியைத் தன் இருப்பிடமாக்கிக் கொண்டான் என்பதைக் குறிக்கின்றது. பூகோளம் கற்பிக்கும் ஒவ்வொரு ஆசிரியரும் இவ்வுண்மையைக் கிரஹித்து, ஒவ்வோரிடத்திலும் மானிட வாழ்க்கை எப்படி அமைந்திருக்கிறது என்பதையும், அதற்குக் காரணங்களையும் ஆராயவேண்டும். "காரணமின்றிக் காரியமில்லை" என்பதுபோல, ஓர் பிரதேசத்தின் இயற்கை யமைப்பினால் மழை, சீதோஷ்ணம் இவைகளும், மழை சீதோஷ்ணத்தால் பயிர்களும், பயிர்களால் மானிட வாழ்க்கையும் விசேஷ மாறுதல்களை யடைகின்றன. இவ்விஷயங்கள் ஒன்றை யொன்று எவ்வளவு தூரம் பாதிக்கின்றது என்பதை ஆராயப் பல உண்மைகள் புலப்படும். உதாரணமாக, மலை யடர்ந்த இடங்களில் சாதாரணமாக மழை, உஷ்ணம் இவைகள் அதிகமாக இருந்தால், அங்கே சாதாரணமாகக் காடுகள் விசேஷமாக இருக்கும். ஆகையால் ஜனத்தொகை மிகவும் குறைவாக இருக்கும். அங்கிருக்கும் சொற்ப ஜனங்களும் காட்டுப் பொருள்களைச் சேகரிக்கும் தொழிலை நடத்துவார்கள். விவசாயம், போக்குவரவு மார்க்கங்கள் இவைகள் மிகவும் குறைவாக இருக்கும். இவ்வாறே, கூடிய வரை, ஒவ்வொரு பிரதேசத்தையும் பற்றிப் படங்களின் உதவியால் பிள்ளைகளே தெரிந்துகொள்ளும்படி ஆசிரியர்கள் முயற்சித்தல் வேண்டும். ஆரம்பத்தில் இம்முறை கொஞ்சம் கஷ்டமாகக் காணப்பட்டாலும், நாளடைவில் குழந்தைகள் அதிக ஊக்கத்துடன் இம்முறையைக் கையாளுகிறார்கள் என்பது இவ்வாசிரியரின் சொந்த அனுபவம். இம்முறையைச் சுலபமாக அநுசரிக்க இப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளது போன்ற படங்களை (Maps) பெரிய கறுப்புக் காகிதங்களில் வரைந்து, அவைகளை வகுப்பில் தொங்கவிட்டு, ஒவ்வொரு பிரதேசங்களைப் பற்றிப் படிக்கும்பொழுதும், இப்படங்களில் ஒன்றுக்கொன்றுள்ள சம்பந்தத்தை விளக்கலாம். பிள்ளைகளுக்கும் அச்சிட்ட காலிப்படங்களை (Out line Maps) க் கொடுத்து, அவ்வப்போது விஷயங்களைக் குறித்துக்கொள்ளச் செய்யலாம்.

"தெரிந்தவைகளைக் கொண்டு தெரியாதவைகளைக் கற்றுக்கொள்ளுதல்" என்பது போதனமுறையில் முக்கிய விதியாகும். அதேபோல, பூகோளப் பாடத்திலும், ஒவ்வோர் புது விஷயங்களையும் கற்பிக்கும்பொழுது, அடிக்கடி அந்தந்தக் கிராமத்துக்குச் சமீபத்திலுள்ள விஷயங்களைப் பிள்ளைகளுக்கு ஞாபகப்படுத்தி, அவைகளை ஒப்பிட்டுக் காட்ட வேண்டும். உதாரணமாக ஒரு மலைப்பிரதேசத்தைப் பற்றிப் போதிக்கும்பொழுது, சமீபத்திலுள்ள குன்றுகளைக் குறிப்பிட்டு, இவற்றிற்கும், அதற்கும் பரிமாணம், முதலியவைகளில் உள்ள சம்பந்தத்தைக் குறிப்பிடலாம்.

இதற்காகப் பிள்ளைகளை அடிக்கடி உல்லாசப் பிரயாணங்களுக்கு (Excursions) அழைத்துச் செல்லுவது நலம். சமீபத்திலுள்ள குன்றுகள், ஏரிகள், நதிகள், வயல்கள், வண்டிப்பேட்டை, பஸ்கள் நிற்குமிடம், ரயில்வேஸ்டேஷன், சந்தை இவைகளுக்குக் குழந்தைகளை அழைத்துச் சென்று, இவைகளைப் பற்றிய விஷயங்களை நேராகத் தெரிந்துகொள்ளும்படி செய்தால், மற்ற வெளியிடங்களைப் பற்றிப் பயிலுங் காலத்து, இவ்விஷயங்கள் அதிக உபயோகமுள்ளதாக இருக்கும். பார்க்கர் என்ற பூகோள சாஸ்திரியார் சொல்வது போல "சுதேசப் பிரதேசமே (Home Region) எல்லா பூகோள சம்பந்தமான விஷயங்களையும் அறிந்துகொள்ளுவதற்கு ஏற்ற ஆராய்ச்சி சாலை."

உல்லாசப் பிரயாணம் செய்யும் சமயத்தில், வழியில் கிடைக்கும் அதிசயப் பொருள்கள், தானியக்கதிர்கள், இன்னும் மற்ற பொருள்களை அவ்வப்போது சேர்த்து, ஒவ்வொரு வகுப்பிலும் கண்காட்சிகள் (Museums) வைக்கலாம். சமாசாரப் பத்திரிகைகள், ரயில்வே விளம்பரங்கள், சர்க்காரின் விவசாய வர்த்தமானங்கள் மற்றும் இதர இலாகாக்களில் வெளியிடப்படும் அறிக்கைகளில் பூகோள சம்பந்தமான வர்த்தமானங்கள், இவைகளையும் சேகரித்தல் நலம்.

இந்த ஜில்லாவைப் பற்றிப் படிக்குமிடத்து, இயற்கையமைப்பு, சீதோஷ்ணம், மழை, விளை பொருள் முதலிய ஒவ்வொன்றையும் பற்றிச் சொல்லுகையில் தாலூகாக்களின் பெயர்களைக் குறிப்பிடவேண்டி யிருப்பதால் முதல் பாடத்திலேயே இப்பிரிவுகளைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

போக்குவரவு மார்க்கங்களைப் பற்றிச் சொல்லுமிடத்து, நேராக அவைகளில் பிரயாணம் செய்வதுபோல் வர்ணனை முறை பின் பற்றப்பட்டிருக்கிறது. மாணவர்கள் படித்த பாடங்களைத் தாமே சிந்தித்து, விஷயங்களை உணர்வதற்கேற்ற பயிற்சிக்கேள்விகள் ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் பல கேள்விகள் பிள்ளைகளின் சொந்தக் கிராமங்களைப் பற்றியவையாகும். அரசாங்கத்தார் சமீபத்தில் வெளியிட்டிருக்கும் பல கணக்குக் குறிப்புகளும் இப்புத்தகத்தில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. பிள்ளைகளுக்குக் கடினமான பல விஷயங்கள் நீக்கப்பட்டுள்ளன.

இச்சிறு புத்தகத்தை ஆதரிக்கும்படி இதைக் கண்ணுறும் ஆசிரியர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்புத்தகத்தின் முன்னேற்றத்துக்குரிய விஷயங்கள் வந்தனத்துடன் அங்கீகரிக்கப் பெறும்.

ஆசிரியர்.

பொருளடக்கம்.

பாடம்.	விஷயம்.	பக்கம்.
1.	பொதுவிபரம் எல்லைகள்.	1
2.	படங்களும், பிளான்களும்.	3
	சர்க்கார் பிரிவுகள்.	4
3.	இயற்கையமைப்பு, நதிகள், ஏரிகள்.	6
4.	சீதோஷ்ணஸ்திதி-மழை.	9
5.	பூமியின் தன்மை, நீர்ப்பாசனம், விளைபொருள்கள்.	11
6.	கைத்தொழில்கள்.	14
7.	ஜனங்கள், மதம், பாஷை.	17
8.	மலைப்பிரதேசம்.	18
9.	மேட்டுப் பிரதேசம்.	,,
10.	பாலாற்றுப் பிரதேசம்.	20
11.	செய்யாற்றுப் பிரதேசம்.	21
12.	வேலூர் நகரம்.	22
13.	ஜில்லாவின் சுற்றுப்பிரயாணம்.	25
	i சாலைமார்க்கம்.	,,
	ii ரயில் மார்க்கம்.	34
14.	ஜில்லாசரித்திரச் சுருக்கம்.	37
15.	அரசாங்கமுறை.	38
16.	முக்கியபட்டணங்கள்.	39
	i அரக்கோணம் தாலூகா.	,,
	ii வாலாஜாபேட்டை தாலூகா.	40
	iii செய்யாறு தாலூகா.	41
	iv வந்தவாசி தாலூகா.	,,
	v ஆரணிஜாகிர்.	42
	vi வேலூர் தாலூகா.	,,
	vii குடியாத்தம் தாலூகா.	43
	viii திருப்பத்தூர் தாலூகா.	,,
	ix போளூர் தாலூகா.	44
	x திருவண்ணாமலை தாலூகா.	45
	xi செங்கம் தாலூகா.	,,
17.	உலக விஷயங்கள்.	46

வட ஆற்காடு ஜில்லா பூகோளம்

முதல்பாடம்.

பொது விபரம்.

எல்லைகள்.

பிள்ளைகளே! நீங்கள் வசிப்பது ......என்ற ஊர். இம்மாதிரி பல ஊர்கள் அடங்கிய பாகத்திற்குத் தாலுகா என்று பெயர். பல தாலுகாக்கள் அடங்கியது ஒரு ஜில்லா. அநேக ஜில்லாக்கள் கொண்டது ஒரு மாகாணம். பல மாகாணங்கள் சேர்ந்தது ஒரு தேசம்.

நாம் வசிக்கும் தேசத்திற்கு இந்தியா என்று பெயர். இந்த தேசத்தின் தென் பாகத்தில் சென்னை மாகாணத்தில் நாம் வசிக்கிறோம்.



திசைப் படம்

ஒரு தேசபடத்தின் திசைகளை அறிவது எப்படி? படத்தைச் சுவரில் தொங்கவிட்டு, அதை நோக்கி ஒரு பையன் நின்றால், படத்தின் தலைப் பாகம் வடக்கு. அடிப்பாகம் தெற்கு. பையனின் வலது கைப்புறம் கிழக்கு. இடது கைப்புறம் மேற்கு.

இதோ கொடுத்திருக்கும் தென் இந்தியாப் படத்தைப் பார்த்து, சென்னை மாகாணத்திற்கு வடக்கேயும், கிழக்கேயும், தெற்கேயும், மேற்கேயும் எவைகள் எல்லைகளாக அமைந்திருக்கின்றன என்று சொல்லுங்கள்.



தென் இந்தியாப் படம்.

சென்னைமாகாணம் இந்தியாவின் தெற்கிலும், தென் கிழக்கிலும் அமைந்திருக்கிறது. இந்த மாகாணத்தின் கிழக்குப் பாகத்தில் நாம் வசிக்கிறோம். இதற்கு வட ஆற்காடு

ஜில்லா என்று பெயர். இதற்கு ஏன் இப்பெயர் வந்தது? வெகுகாலத்திற்கு முன் நம் ஜில்லாவும், இதற்குத் தெற்கேயுள்ள தென் ஆற்காடு ஜில்லாவும் சேர்ந்து ஒரே ஜில்லாவாக, ஆற்காட்டைத் தலைநகரமாகக் கொண்டு இருந்தன. பிறகு இதை இரண்டு ஜில்லாக்களாகப் பிரித்து, நம் ஜில்லா வடபாகத்தில் இருப்பதால் அதற்கு வடஆற்காடு என்று பெயரிட்டார்கள். புது ஜில்லாவில் ஆற்காடு, மத்தியில் இல்லாததால் அதற்குப்பதிலாக வேலூரைத் தலைநகராகச் செய்திருக்கிறார்கள். இப்போது நாம் கற்றுக் கொள்ளப் போவது நமது ஜில்லாவின் பூகோளமே.

நமது ஜில்லாவின் படத்தைக் கவனியுங்கள். நமது ஜில்லாவுக்குக் கிழக்கே செங்கற்பட்டு ஜில்லாவும், தெற்கே தென் ஆற்காடு ஜில்லாவும், மேற்கே சேலம் ஜில்லாவும், கங்குந்தி ஜமீனும், வடக்கே சித்தூர் ஜில்லாவும் எல்லைகளாக அமைந்திருப்பதைக் காண்பீர்கள்.

பூகோளப் பாடங்களைக் கற்றுக் கொள்வதற்கு முதன் முதலில் முக்கியமாக நாம் தெரிந்து கொள்ள வேண்டியது நாம் படிக்கும் பாகத்தின் எல்லைகள் இன்னவை என்பதே. முன்னே கூறிய வாறு படத்தைச் சுவரில் தொங்கவிட்டு அதன் நான்கு திக்குகளையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

அதிகாலையில் நாம் படுக்கையை விட்டு எழுந்து வெளியே வந்தால் சூரியன் உதிப்பதைக் காண்கிறோம் அல்லவா? அம்மாதிரி சூரியன் உதிக்கும் திக்குக்குக் கிழக்கு என்று பெயர். நாம்



கிழக்குப்பக்கம் திரும்பி நின்றால், மற்ற திக்குகளைச் சுலபமாகத்தெரிந்து கொள்ளலாம். நமது முதுகுப்புறம் இருக்கும் திக்கு மேற்கு; வலது கைப்புறம் தெற்கு; இடது கைப்புறம்



திக்குப் படம்.

வடக்கு. இந்நான்கு திக்குகளுக்கும் இடை யிடையே, தென்கிழக்கு, தென்மேற்கு, வடகிழக்கு, வடமேற்கு என்னும் வேறு நான்கு திசைகளும் இருக்கின்றன. இத்திசைகளைச் சுலபமாகத் தெரிந்து கொள்ள ஒரு கருவி இருக்கிறது. அதற்குத் தமிழில் "திசை காட்டும் கருவி" என்றும் ஆங்கிலத்தில் "காம்பஸ்" (Compass) என்றும் பெயர்.



திசை காட்டும் கருவிப் படம்.

இரண்டாம் பாடம்.

படங்களும், பிளான்களும்.

ஒரு ஜில்லாவின் பூகோளத்தைக் கற்பதற்குச் சிறந்த வழி, அந்த ஜில்லாவின் பல பாகங்களுக்கும் சென்று, ஆங்காங்கு உள்ள மலைகள், நதிகள், விளைபொருள்கள், மனித வாழ்க்கை, நகரங்கள் இவைகளைப் பார்த்துத் தெரிந்து கொள்வதுதான். இது எல்லோருக்கும் சாத்தியமில்லை. ஆகையால் இதற்கு அடுத்தபடியாக, அந்த ஜில்லாவின் படத்தைத் தயாரித்து, அதைக்கொண்டு பூகோளத்தைக் கற்றுக்கொள்ளலாம்.

ஒரு பூபாகத்தின் படத்தை எப்படி வரைவதென்று தெரிந்து கொள்ள வேண்டும். நாம் இருக்கும் ஊரோ, ஜில்லாவோ மிகவும் பெரியதாக இருந்தபோதிலும், அதன்படத்தை நாம் காகிதத்தில் வரையத்தெரிந்து கொள்ளவேண்டும். ஒருவன் ஒரு வீடோ, அல்லது குடிசையோ கட்ட வேண்டுமென்று உத்தேசித்தால், முதலில் அதற்கு நிலப் படம் (பிளான்-Plan) ஒன்று தயார்செய்து கொள்ளுகிறான். அதாவது, வீட்டின் நான்கு எல்லைகளையும், அதனுடைய நீளம், அகலம், உட்புறத்திலுள்ள அறைகள், கூடம், தாழ்வாரம் முதலிய வற்றின் விஸ்தீரணங்களையும், அமைப்பையும் நிலப் படமாக வரைந்து கொள்ளுகிறான். ரப்பர்த் துண்டு, கண்ணாடி, புஸ்தகம், முதலிய சிறு சாமான்களின் தரைப் படத்தைச் சுலபமாக வரைந்து விடலாம். கண்ணாடியை ஒரு காகிதத்தின்

2 அங்குலம்

அளவு = 1 அடி = 1 அங்குலம்.

OFFICE OF THE ... 18 JAN 1939 MADRAS

மேல் வைத்து அதன் நான்கு முனைகளையும் பென்சிலின் நுனியால் குறித்துப் பிறகு கண்ணாடியை எடுத்து விட்டுக் குறிப்பிட்ட நான்கு முனைகளையும் சேர்த்துப் பார்த்தால் அது கண்ணாடியின் நிலப்படமாகும். ஒருபெரிய பலகையின் தரைப்படத்தைக் காகிதத்தில் குறிப்பதென்றால், முடியாத காரியம். அதற்காக அப்பலகையின் அகல நீளத்தை முதலில் அளந்து பார்க்க வேண்டும். அப்பலகை இரண்டடி நீளமும், ஒரு அடி அகலமும் இருப்பதாகவைத்துக் கொள்ளுவோம். காகிதத்தில் ஒரு அங்குலத்திற்கு ஒரு அடி என்று வைத்துக் கொண்டு, அகல நீளங்களை வரைந்தால் அது பலகையின் படமாகும். படம் வரையப் பட்டிருக்கும் காகிதத்



வாசிக்கும் அறைப் படம்.

தில் "அளவு=1 அடி=1 அங்குலம்" என்று குறித்து வைப்பது அவசிய மாகும்.

இவ்வாறே நாம் வசிக்கும் அறை யின் தரைப்படத்தை வரைந்து அதி லுள்ள ஜன்னல்கள், வாசற்படிகள் இவைகளைக்குறித்துக்காட்டமுடியும். இதுபோலவே ஒரு ஜில்லா அல்லது ஒருதேசத்தின் அளவுகளைக்கொண்டு, படம் வரைந்து, அதில் மலைகள், ஆறுகள், சாலைகள், ரயில் பாதைகள் முதலிய வற்றைக் குறித்திருக்கும் படங்களைப்பூகோளம்கற்றுக்கொள்ள உபயோகப்படுத்துகிறோம்.

பயிற்சிக்கேள்விகள்.

1. நாம் வசிப்பது எந்த தேசம்?

2. ஒரு தேசத்தின் பல உட்பிரிவுகளுக்கு என்ன பெயர்?

3. வடஆற்காடு ஜில்லா எந்த உட்பிரிவைச் சேர்ந்தது?

4. நமது ஜில்லா நம் தேசத்தில் எந்தப் பக் கம் அமைந்திருக்கிறது?

5. நான்கு திக்குகளையும் எப்படிக்கண்டு பிடிப் பது?

6. உங்கள் ஊரின் நான்கு திக்குகளிலும் எந்தெந்த ஊர்கள் இருக்கின்றன?

7. ஒருபடத்தின் திசைகளை எப்படிக் கண்டு பிடிப்பாய்?

8. நமது ஜில்லாவின் எல்லைகள் எவை?

9. ஒரு புத்தகத்தின் பிளானை வரைகிறதென் றால் என்ன செய்வாய்?

10. ஒரு கட்டிடத்தின் நீளம் 60 அடியும், அகலம் 30 அடியுமாயிருந்தால் அக்கட்டித் தின் பிளானை எப்படி வரைவாய்?

11. உன் பாடசாலையின் பிளானை வரைந்து காட்டு.

12. பூகோளம் கற்றுக் கொள்ளப் படங்கள் ஏன் முக்கியமானவை?

இரண்டாம் பாடம்.

வட ஆற்காடுஜில்லா,

சர்க்கார் பிரிவுகள்.

ஒரு ஜில்லாவானது பல தாலூகாக் களைக்கொண்ட ஓர் பிரிவு என்று முன் னமேயே படித்தோம் அல்லவா? நம் வடஆற்காடு ஜில்லாவைப் பத்துத் தாலூகாக்களாகப்பிரித்திருக்கிறார்கள். அவையாவன:--1. வேலூர், 2. குடியாத் தம், 3. வாலாஜாப்பேட்டை, 4. ஆரக் கோணம், 5. செய்யாறு, 6. வந்தவாசி, 7. போளூர், 8. திருவண்ணாமலை, 9. செங் கம், 10. திருப்பத்தூர். இவைகளில் நீங் கள் வசிக்கும் தாலூகா......என்பது. நம் ஜில்லாவின் விஸ்தீரணம் 4600 சதுரமைல்கள் என்று கணக்கிட்டிருக் கிறார்கள்.

இந்தப்பத்துத்தாலூகாக்களைத்தவிர ஆரணி என்ற ஜாகீரும் நமது ஜில்லா வில் அடங்கியிருக்கின்றது. தாலூகா வுக்கும், ஜாகீருக்கும் என்ன வித்தியா சம்? தாலூகாவில் நிலவரி முதலிய வை வசூல் செய்யும் உத்யோகஸ்தர் தாசில்தார். இவர் நமது அரசாங்க உத் யோகஸ்தர். ஆனால் ஜாகீர்தார் வரி வசூல் செய்பவர் ஜாகீர்தார் என்று சொல்லப்படுவார். முற்காலத்தில் அரசாங்கத்திற்கு யாராவது உதவி செய்தால், அவர்களுக்கும் அவர்கள் சந்ததியார்களுக்குமாகப் பலகிராமங் கள் அடங்கிய ஜாகீர் என்பதை, அர சாங்கத்தார் கொடுப்பார்கள். ஜாகீர் தார் அந்தஜாகீரின் நிலவரியைவசூல் செய்து, குறிப்பிட்ட ஒரு பகுதியைச் சர்க்காருக்குச் செலுத்திவிட்டு, மீதி யைத்தாங்கள்எடுத்துக்கொள்வார்கள்.



வட ஆற்காடு ஜில்லா
தாலூகாக்களும்
முக்கிய பட்டணங்களும்
ஸ்கேல் 1 அங்—14 மைல்கள்
சித்தூர் ஜில்லா
செங்கற்பட்டு ஜில்லா
சேலம் ஜில்லா
தென் ஆற்காடு ஜில்லா
வ
மே
கி
தெ
குடியாத்தம்
குடியாத்தம்
பேரணம்பட்டு
பள்ளிகொண்டை
ஆம்பூர்
வேலூர்
வேலூர்
சோளங்கிபுரம்
அரக்கோணம்
அரக்கோணம்
ராணிப்பேட்டை
வாலாஜாபேட்டை
விஷாரம்
ஆற்காடு
வாலாஜா பேட்டை
ஆரணி
ஆரணி
செய்யாறு
செய்யாறு
வாணியம்பாடி
திருப்பத்தூர்
ஜோலார்பேட்டை
திருப்பத்தூர்
போளூர்
போளூர்
சேத்துப்பட்டு
வந்தவாசி
வந்தவாசி
புதுப்பாளையம்
செங்கம்
செங்கம்
திருவண்ணாமலை
திருவண்ணாமலை

மூன்றும் பாடம்.

இயற்கையமைப்பு

நதிகள், ஏரிகள்.

சாதாரணமாகப் பூமி எங்கும் மேடு பள்ளம் இல்லாமல் சமநிலமாக இராது என்பதை நாம் அறிவோம். மலைகள், ஆறுகள், பள்ளத்தாக்குகள் இவைகள் மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டவை அல்ல. இயற்கையாகவே ஏற்பட்டவை. ஆகையால் இவைகளை இயற்கையமைப்பு என்று கூறுவது வழக்கம்.

நமது ஜில்லாவின் இயற்கையமைப்புப் படத்தைப் பாருங்கள். அதில் கொடுத்திருக்கும் குறிப்பைக்கொண்டு, ஒவ்வோர் இடத்திலும் பூமி, சமுத்திரமட்டத்துக்குமேல் எவ்வளவு உயரத்தில் இருக்கிறது என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

நமது ஜில்லாவில் நிலம் எந்தப் பக்கம் சரிந்திருக்கிறது என்று எப்படிக் கண்டுபிடிப்பீர்கள்? ஓர் இடத்தில் தண்ணீரை ஊற்றினுல் அது பள்ளமான இடத்தை நோக்கி ஓடுகிறதல்லவா? அதேபோல் நதிகளும் மேட்டுப் பிரதேசத்திலிருந்து பள்ளத்தை நோக்கி ஓடுகின்றன. நம் ஜில்லா படத்தில் நதிகள் மேற்கே இருந்து கிழக்கே ஓடுவதாகக் காட்டி இருக்கிற படியால், பூமி மேற்கேயிருந்து கிழக்காகச் சரிந்திருப்பதாக அறிகிருேம்.

நமது ஜில்லாவின் மேற்குப் பாகம் மலையடர்ந்த பிரதேசம் என்பதைப் படத்தில் பாருங்கள். அவைகளில் உயர்ந்த மலைத்தொடருக்கு **ஜவ்வாது மலை** என்று பெயர். இது எந்தெந்தத் தாலூகாவில் வியாபித்திருக்கின்றது? இதைத்தவிர பல குன்றுகளும் இருக்கின்றன. இவைகளில் முக்கியமானவை **கர்நாடிகர், சுவாமிமலை, கைலாசகிரி, மகாதேவமலை, திருவண்ணுமலை** முதலிய குன்றுகள். இவைகள் எந்தெந்தத் தாலூகாக்களில் இருக்கின்றன என்பதைப்படத்தில் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

வடஆற்காடு ஜில்லாவில் முக்கிய ஆறுகள் இரண்டு. வடக்குப்பாகத்தில் **பாலாறும்**, தெற்குப்பாகத்தில் **செய்யாறும்** இருக்கின்றன. பாலாறு மைசூர் சமஸ்தானத்தில் உற்பத்தியாகிச் சித்தூர் ஜில்லாவிலுள்ள மலைகளுக்கும், ஜவ்வாது மலைக்கும் மத்தியில் உள்ள பள்ளத்தாக்கு வழியாகப் பாய்கிறது. பிறகு இது செங்கல்பட்டு ஜில்லாவில் புகுந்து, கடைசியாகவங்காளக்குடாக் கடலில் விழுகிறது.

இரண்டு மலைகளுக்கு நடுவில் உள்ள பள்ளத்தாக்குக்குக் **கணவாய்** என்று பெயர். பாலாறு பாயும் இக்கணவாய்க்கு **வாணியம்பாடிக்கணவாய்** என்று பெயர். கணவாய்கள் போக்குவரவுக்கு மிகவும் அநுகூலமானவை. சென்னையிலிருந்து பெங்களூருக்குச் செல்லும் இருப்புப் பாதையும், ரஸ்தாவும்இந்தக் கணவாயின் வழியாகத்தான் செல்லுகின்றன.

கௌண்டின்யநதி, பொன்னியாறு என்ற இரண்டு சிறு நதிகளும் சித்தூர் ஜில்லாவில் உற்பத்தியாகி, நமது ஜில்லாவில் புகுந்து, கௌண்டின்ய நதி **பள்ளிகொண்டை** என்ற இடத்திலும், பொன்னியாறு ஆற்காட்டுக்கு மேற்கே மூன்றரை மைல் தூரத்திலுள்ள **விஷாரம்** என்றஇடத்திலும் பாலாற்றுடன் கலக்கின்றன. இம்மாதிரி ஒரு பெரிய நதியுடன்



வட ஆற்காடு ஜில்லா
இயற்கை அமைப்பு
ஸ்கேல் 1 அங்—14 மைல்கள்
சித்தூர் ஜில்லா
அரக்கோணம்
மஹாதேவமலை
பாலாறு
பொன்னியாறு
காவேரிப்பாக்கம் ஏரி
மாமண்டூர் ஏரி
வாலாஜா பேட்டை
வேலூர்
குடியாத்தம்
செங்கற்பட்டு ஜில்லா
செய்யாறு
ஆரணி
கமண்டலநதி
நாகநதி
ஜவ்வாது மலை
திருப்பத்தூர்
போளூர்
வந்தவாசி
திருவண்ணாமலை
செங்கம்
பெண்ணையாறு
திருவண்ணாமலைக் குன்று
சேலம் ஜில்லா
தென் ஆற்காடு ஜில்லா
3000 அடி
1200' அடி
600 அடி
கடல் மட்டம்
வ
மே
கி
தெ

கலக்கும் சிறிய நதிக்கு, **உபநதி** என்று பெயர்.

செய்யாறு நமது ஜில்லாவில் ஜவ்வாது மலையில் உற்பத்தியாகி, அம் மலைக்கும், திருவண்ணுமலைக்குன்றுகளுக்கும் மத்தியில் உள்ள பள்ளத்தாக்கு வழியாக ஓடிச் செங்கற்பட்டு ஜில்லாவில் பாலாற்றுடன் கலக்கிறது. இதன் முக்கிய உபநதி **கமண்டல நாகநதி** என்பது. இது, கமண்டல நதி, நாகநதி என்ற இரண்டு சிற்ருறுகள் ஒன்ருகச் சேர்ந்து பாய்வது. செய்யாறு பாயும் பள்ளத்தாக்குக்குச் **செங்கம்மா கணவாய்** என்று பெயர். இது சேலம் ஜில்லா, திருப்பத்தூர் தாலூகா இவைகளுக்குச் செல்ல அநுகூலமாக இருக்கிறது.

பாலாறு, செய்யாறு இரண்டு நதிகளிலும் மழைக்காலத்தில் அதிகத் தண்ணீர் ஓடுகிறது. இவைகள் வீணுகக் கடலுக்குச் சென்று விட்டால், பிறகு மழையில்லாத காலங்களில் தண்ணீருக்குக் கஷ்டப்படவேண்டி வரும் அல்லவா? அதற்காக இந்த நதிகளில் குறுக்கே அணைகள் கட்டி, தண்ணீரைத் தேக்கி, அதைக் கால்வாய்களின் வழியாகக் கொண்டு போய் ஏரிகளில் நிரப்பி, அத்தண்ணீரை வருஷம் முழுவதும் வயல்களுக்கு உபயோகப் படுத்துகிருர்கள்.

இப்படிப்பட்ட ஏரிகளில் முக்கியமானவை, பாலாற்றிலிருந்து நிரப்பப் படும் **காவேரிப்பாக்கம் ஏரியும், மாமண்டூர் ஏரியும்**, நாகநதியிலிருந்து நிரப்பப்படும் **களம்பூர்ஏரி**களுமாம். இவற்றைப் படத்தில் காண்க. இவற்றில் காவேரிப் பாக்கம் ஏரியேஇந்தஜில்லாவில் மிகப் பெரிய ஏரி. பொன்னியாற்றில், **பொன்னை** என்ற இடத்தில் ஓர் அணைக்கட்டு இருக்கிறது.

இந்த இயற்கை யமைப்பைக் கொண்டு நமது ஜில்லாவை நான்கு பாகங்களாகப் பிரிக்கலாம். அவையாவன:— (1) மலைப்பிரதேசம் (2) மேட்டுப்பிரதேசம் (3) பாலாற்றுப் பிரதேசம் (4) செய்யாற்றுப்பிரதேசம்.

பயிற்சிக் கேள்விகள்.

1. நீங்கள் வசிக்கும் தாலூகாவின் எல்லைகள் எவை?
2. நமது ஜில்லாவின் விஸ்தீரணம் என்ன?
3. ஜாகீர் என்ருல் என்ன? நமது ஜில்லாவில் உள்ள ஜாகீரின் பெயர் என்ன?
4. நம் ஜில்லாவை எத்தனை இயற்கைப் பிரிவுகளாகப் பிரிக்கலாம்? உங்கள் கிராமம் எந்தப் பிரிவில் இருக்கிறது?
5. கீழ்க்கண்ட வாக்கியங்களில் எவை சரி, எவை தப்பு என்று கூறுக.
   - i பாலாறு ஜவ்வாது மலையில் உற்பத்தியாகிறது.
   - ii நம் ஜில்லா மேற்கிலிருந்து கிழக்காகச் சரிந்திருக்கிறது.
   - iii களம்பூர் ஏரிக்குப் பாலாற்றிலிருந்து தண்ணீர் பாய்கிறது.
   - iv நமது ஜில்லாவில் மிகப் பெரிய ஏரி மாமண்டூர் ஏரி.
   - v கமண்டல நாகநதி செய்யாற்றின் உபநதி.
6. படத்தைப்பார்த்துப்பாலாறு, செய்யாறு இவைகள் எந்தத் தாலூகாக்களின் வழியாகப் பாய்கின்றன என்று சொல்லுங்கள்.
7. நம் ஜில்லாவிலுள்ள முக்கிய கணவாய்கள் எவை? அவைகள் எங்கெங்கு செல்ல உபயோகப்படுகின்றன?

நான்காம் பாடம்.

சீதோஷ்ணஸ்திதி.

சீதம் என்றால் குளிர்ச்சி. உஷ்ணம் என்றால் சூடு. ஸ்திதி என்றால் நிலைமை. ஆகவே சீதோஷ்ண ஸ்திதி என்றால் ஓர் இடத்தில் எப்பொழுது அதிக உஷ்ணமாயிருக்கிறது. எப்பொழுது அதிக குளிர்ச்சியாயிருக்கிறது என்று சொல்லுவதுதான். கடற்கரையிலுள்ள ஜில்லாக்களில் எப்பொழுதும் உஷ்ணமாவது, குளிர்ச்சியாவது அதிகம் இராது. நமது ஜில்லா கடற்கரையில் இல்லை என்பதைப் படத்தில் பாருங்கள். ஆகையால் பொதுவாகவே நமது ஜில்லா உஷ்ணமானது. கிழக்கு பாகத்திலுள்ள சமவெளிகளில் உஷ்ணம் அதிகம். இதில் எந்தெந்தத் தாலூகாக்கள் அடங்கியிருக்கின்றன பாருங்கள். மேற்கு பாகத்திலுள்ள குன்றுகளிலும், மேட்டுப் பிரதேசங்களிலும் குளிர்ச்சியாகவே இருக்கின்றது. இந்த நிலைமை சுமாராகப் பங்குனி மாதம் மத்தி (அதாவது ஏப்ரல் மாத ஆரம்பம்) முதல் ஆனிமாத மத்தி (அதாவது ஜூலைமாத ஆரம்பம்) வரை இருக்கின்றது. மற்றமாதங்களில் அவ்வளவு உஷ்ணம் இல்லை.

மழை.



மழை உண்டாவது எப்படி.

ஓர் பாத்திரத்தில் நீரை ஊற்றிக் காய்ச்சினால் அது ஆவியாகப் போவதைக் கவனித்திருக்கிறீர்களா? அதே மாதிரி சூரியனுடைய உஷ்ணத்தினால் ஆறு, ஏரி, கடல் இவைகளில் உள்ள தண்ணீர் நீராவியாக மாறி, மேலே சென்று மேகமாக மாறுகிறது. மேகங்கள் ஆகாயத்தில் வேகமாகச் செல்வதைக் கவனித்திருக்கிறீர்களா? இதற்குக் காரணம் அவைகள் காற்றினால் அடித்துக்கொண்டு போகப்படுகின்றன. பிறகு அவைகளின் மேல் குளிர்ந்தகாற்றுப் படும்பொழுது, மழையாகப் பூமியில் விழுகின்றன.



இப்படிவிழும் மழையை ஓர் கருவியினால் அளப்பது வழக்கம். அப்படி அளந்து, ஓர் இடத்தில் இவ்வளவு அங்குலம் மழை பெய்கிறது என்று சொல்லுவதுண்டு. அதையே சிலர் இவ்வளவு "சுழி" அல்லது "செவி" மழை என்றும் சொல்லுவார்கள்.



மழை அளக்கும் கருவி.

சென்னைராஜதானிப் படத்தில் மேற்கு பாகத்தில் அரபிக்கடல் இருப்பதைக் கவனியுங்கள். ஆனி மாதம் முதல் புரட்டாசி மாதம் வரை இந்த


தென் மேற்குக் காற்று.


வடகிழக்குக் காற்று.

சமுத்திரத்திலிருந்து தென்மேற்காக வீசும் காற்று ஏராளமான நீராவி மேகங்களைத் தள்ளிக்கொண்டு வருகிறது. ஆனல் அந்தக் கடற்கரையிலுள்ள மலைகளால் தடுக்கப்படுவதால், அம் மேகங்கள் அங்கேயே மழை பொழிகின்றன. நமது ஜில்லா இம் மலைகளுக்குக் கிழக்கே இருப்பதால் இங்கு அவ்வளவு மழை கிடையாது. ஆனல் சில சமயங்களில் கொஞ்சம் மேகம், இம்மலைகளைத்தாண்டி வரும் போது சிறிது மழையைக் கொடுக்கின்றது. இதற்குத்தான் கோடை மழை என்று பெயர். இச்சமயம் நமது ஜில்லாவில், சுமார் 18 அங்குலம் மழை பெய்கின்றது.

ஐப்பசி மாதம் முதல் மார்கழி மாதம் வரை, சென்னை ராஜதானியின் கிழக்கிலுள்ள வங்காளக்குடாக் கடலிலிருந்து வட-கிழக்காக வீசும் காற்று கொண்டுவரும் மேகத்தினல், நமது ஜில்லாவில் சுமார் 25 அங்குலம் மழை பெய்கிறது. இதுவே நமக்கு மழைக் காலம்.

பொதுவாக நமது ஜில்லாவின் கிழக்கு, மத்தியபாகங்களாகியவேலூர், வந்தவாசி, செய்யாறு, வாலாஜா, இந்தத் தாலுகாக்களில் வருஷத்தில் சுமார் 40 அங்குலத்துக்குமேல் மழையும், திருப்பத்தூர் தாலுகாவில் 35 அங்குலத்துக்குக் குறைந்த மழையும், மற்ற தாலுகாக்களில் 35க்கு மேல், 40 அங்குலம் வரை மழையும் பெய்கின்றது.



பயிற்சிக் கேள்விகள்.

1. கீழேகண்ட படத்தைப்பார்த்து, உங்கள் தாலூகாவில் வருஷத்தில் சுமார் எவ்வளவு அங்குலம் மழை என்றும், எந்தத் தாலூகாவில் மிக அதிக மழை என்றும், எங்கே குறைந்த மழை என்றும் சொல்லுங்கள்.
2. எந்தக் காற்றினுல் நம் ஜில்லாவில் அதிக மழை பெய்கின்றது?
3. ஆனி மாதம் முதல் புரட்டாசி மாதம் வரை நம் ஜில்லாவில் அதிகமழை இல்லை. ஏன்?
4. நமது ஜில்லாவில் பொதுவாக உஷ்ணம் அதிகம். ஏன்?

ஐந்தாம் பாடம்.

பூமியின்தன்மை.

நீர்ப்பாசனம், விளைபொருள்கள்,

சில இடங்களில் நெல் முதலிய நன்செய்ப் பயிர்கள் நன்ருக உண்டாகின்றன. வேறு சில இடங்களில் கேழ்வரகு முதலிய புன்செய்ப் பயிர்கள் நன்ருக உண்டாகின்றன. சில இடங்களில் எந்தப் பயிரும் உண்டாவதில்லை. இவைகளுக்குக் காரணம் அந்தந்த இடத்தில் உள்ள பூமியின் தன்மைதான். அதாவது நிலத்தில் அமைந்துள்ள மண்ணும், வயல்களுக்கு நீர்பாய்ச்ச ஏற்பட்டிருக்கும் வசதியுமே.

எல்லா இடங்களிலும் மண் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. நமது ஜில்லாவில் பாலாறு, செய்யாறு இவை பாயும் பிரதேசங்களிலும், ஏரித்தண்ணீர் பாயும் பிரதேசங்களிலும் உள்ள நிலம் கறுப்பு நிறமான களி மண் பூமி. வேறு சில இடங்களில் மணல் கலந்த செம்மண் பூமியாகவும் இருக்கிறது.

பயிர்கள் நன்ருய் வளர்வதற்குத் தண்ணீர் அவசியம் அல்லவா? நமது ஜில்லாவில் வருஷத்தில் 50 நாள் தான் மழை பெய்வதாகக் கணக்கு எடுத்திருக்கிருர்கள். இதர நாட்களில் வேறு வழியில் வயல்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுகிருர்கள். ஆறுகளில்குறுக்கே அணைபோட்டு,மழைக்



காலத்தில் தண்ணீரை ஏரிகளில் நிரப்பி, வருஷம் முழுவதும் வயல்களுக்குப் பாய்ச்சுகிருர்கள் என்று முன்னமேயே படித்தோம் அல்லவா? இம்மாதிரிப் பாலாற்றுத்தண்ணீரை, காவேரிப்பாக்கம், மாமண்டூர் ஏரிகளிலும், நாகநதியிலிருந்துதண்ணீரைக் களம்பூர் ஏரியிலும் நிரப்பி, கால்வாய்கள் வழியாகத் தண்ணீரை வயல்களுக்குச் சாகுபடிக்குக் கொண்டு போகிருர்கள். பொன்னை யாற்றிலும் இம்மாதிரி ஓர் அணை இருக்கிறது. ஆற்றில் தண்ணீர் இல்லாத காலங்களில், ஆற்றின் மத்தியில் மணலில் கால்வாய்கள் தோண்டினுல், ஊற்றுத் தண்ணீர் ஓடிவரும். இதையும் பயிர்களுக்கு உபயோகிக்கிருர்கள். குடியாத்தம் தாலூகாவில் இம்மாதிரி அநேக கால்வாய்கள் இருக்கின்றன. போளூர், குடியாத்தம் தாலூ



ஏற்றம் வைத்த கிணறு.

காக்களில் நூற்றுக்கணக்கான கிணறுகள் வெட்டித் தண்ணீர் பாய்ச்சுகிறார்கள்.

நமது ஜில்லாவில் அநேக அடர்ந்த காடுகள் இருக்கின்றன. இவைகள் முக்கியமாக வேலூர், போளூர், திருவண்ணாமலை, இந்தத் தாலூகாக்களில் விசேஷமாக இருக்கின்றன. இக்காடுகளிலிருந்து தேக்கு, கருங்காலி, சந்தனம் முதலிய மரங்களும், விறகுகளும், தேன், மெழுகு, தோல் பதனிடும் பட்டைகள், மருந்து மூலிகைகள் இவைகளும் கிடைக்கின்றன. சில இடங்களில் புலி, சிவிங்கிப்புலி, குரங்கு, மான் முதலிய மிருகங்களும் காணப்படுகின்றன.

விளைபொருள்கள்.

நமது ஜில்லாவில் இரண்டு பாகம் நன்செய் நிலங்களாகவும், ஒரு பாகம் புன்செய் நிலங்களாகவும் இருக்கின்றன. அரக்கோணம், செய்யாறு, வந்தவாசி, வாலாஜாப்பேட்டை இந்தத் தாலூகாக்களில் நன்செய் நிலங்கள் அதிகம். ஏன்? ஆறுகள், ஏரிகள் இவைகளின் உதவியால் இவ்விடங்களில் நெல் விசேஷமாகப் பயிரிடுகிறார்கள். வாலாஜாப் பேட்டை, திருப்பத்தூர், குடியாத்தம் இவ்விடங்களில் கரும்பு விசேஷமாகப் பயிரிடுகிறார்கள். இதிலிருந்து வெல்லமும், சர்க்கரையும் செய்யப்படுகின்றன.

புன்செய்ப் பயிர்களாகிய கம்பு, கேழ்வரகு இவைகள் அரக்கோணம், திருவண்ணாமலை தாலூகாக்களிலும், துவரை, திருப்பத்தூர் தாலூகாவிலும், எள்ளு, செய்யாறு வந்தவாசி தாலூகாக்களிலும் கொள்ளு, குடியாத்தம் தாலூகாவிலும் அநேக இடங்களில் வேர்க்கடலை (மணிலாக்கொட்டை) யும் பயிரிடுகிறார்கள். வேலூர், குடியாத்தம், வாலாஜா தாலூகாக்களில் மாமரங்கள் ஏராளமாக இருக்கின்றன. திருப்பத்தூர் தாலூகாவில் கொடிமுந்திரிப் (பச்சை திராட்சைப்) பழமும் குடியாத்தம் தாலூகாவில் சாத்துக்குடி என்ற இடத்தைச் சுற்றி, விசேஷமாக ஆரஞ்சுப்பழங்களும் இருக்கின்றன. வேலூர், வாலாஜப் பேட்டை, வந்தவாசி, இந்தத் தாலூகாக்களில் வெற்றிலை பயிர் செய்கிறார்கள். பழங்களும், வெற்றிலையும் நம் ஜில்லாவிலிருந்து நம் தேசத்தில் அநேக இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

பயிற்சிக் கேள்விகள்.

1. நமது ஜில்லாவில் முக்கிய ஏரிகள் எவை? படத்தைப் பார்த்து அவை எந்தெந்தத் தாலூகாக்களிலுள்ள நிலங்களுக்குப் பாய்கின்றன என்று சொல்லுங்கள்.
2. உங்கள் ஊரிலுள்ள நிலங்களுக்கு எங்கிருந்து தண்ணீர் பாய்கிறது?
3. உங்கள் ஊரில் நன்செய் நிலம் அதிகமா? புன்செய் நிலம் அதிகமா?
4. உங்கள் ஊரில் முக்கிய விளைபொருள்கள் எவை?

வட ஆற்காடு ஜில்லா
ஸ்கேல் 1 அங்—14 மைல்கள்
விளைபொருள்கள்
சித்தூர் ஜில்லா
செங்கற்பட்டு ஜில்லா
சேலம் ஜில்லா
தென் ஆற்காடு ஜில்லா
வ
மே
கி
தெ
நிலக்கடலை
அரக்கோணம்
சோளம்
கேழ்வரகு
கம்பு
நெல்
புளி
ஆரஞ்சு
புகையிலை
மணிலாககொட்டை
மாமரம்
குடியாத்தம்
கரும்பு
நெல் கரும்பு
வாலாஜா
நெல் கரும்பு
மாமரம் பேட்
தென்னை
தென்னை
வாழை
வெற்றிலை
மாமரம்
கேழ்வரகு
நெல்
கரும்பு
வேலூர்
புகையிலை
தென்னை
வாழை
ஆரணி
செய்யாறு
புளி
கரும்பு
புகையிலை
கேழ்வரகு
வெற்றிலை
உளுந்து
வாழை
என்
காப்பி
நிலக்
துவரை
துவரை
துவரை
கடலை
கேழ்வரகு
திருப்பத்தூர்
கடுகு
போளூர்
என்
கேழ்வரகு
சந்தனம்
நெல்
உளுந்து
கஞ்சா
மூங்கில்
திராட்சை
தேக்கு
வந்தவாசி
என்
கம்பு
மூங்கில்
சோளம்
மாமரம்
கடுகு
நிலக்கடலை
செங்கம்
திருவண்ணாமலை
நிலக்கடலை
கம்பு
மாமரம்
மிளகாய்
கேழ்வரகு
சோளம்
புகையிலை
கம்பு

5. கீழ்க்கண்ட வாக்கியங்கள் சரியா, தப்பா என்று கூறுக:—

i நெல் புன்செய்ப் பயிர்.

ii வேலூர் தாலூகாவில் காடுகள் விசேஷம்.

iii நமது ஜில்லாவிலுள்ள காடுகளில் சிங்கங்கள் இருக்கின்றன.

iv போளூர் தாலூகாவில் கிணறுகள் அதிகம் கிடையாது.

v வாலாஜாப்பேட்டை தாலூகாவில் கரும்பு விசேஷமாகப் பயிராகிறது.

6. கீழ்க்கண்ட வாக்கியங்களில்ஒவ்வொன்றிலும் கோடிட்ட இடத்தில், அந்தந்த வாக்கியத்தின்முடிவில்பிராக்கட்டுகள்கொடுத்திருக்கும் வார்த்தைகளில் ஒன்றைப் போட்டுப் பூர்த்தி செய்.

i கொடிமுந்திரிப்பழம்—தாலூகாவில் பயிராகிறது.
(அரக்கோணம்; போளூர்; திருப்பத்தூர்.)

ii ஆரஞ்சுப்பழம்—என்ற ஊரின் சமீபத்தில் பயிராகிறது.
(சாத்துக்குடி; ஆற்காடு; மேலூர்.)

iii எள் விசேஷமாய்ப்பயிராகும் தாலூகா—(குடியாத்தம்; செய்யாறு; திருவண்ணாமலை.)

ஆறும் பாடம்.

கைத்தொழில்கள்.

நமது ஜில்லாவில் நூற்றுக்கு 80, பேருக்கு மேல் விவசாயம் செய்தும், ஆடுமாடுகளை வளர்த்தும் ஜீவனம் செய்கிறார்கள். இவைகளுக்கு அடுத்தபடியாக நூல்நூற்றுத் துணிகளும் நெய்து வந்தார்கள். சாயம் காய்ச்ச உபயோகப்படும் அவுரி என்னும் செடியையும் பல இடங்களில் பயிரிட்டு வந்தார்கள்.

ஆனால் இப்பொழுது வெளிநாடுகளிலிருந்து அநேகவிதமான நூல்களும்,சாயங்களும் மலிவாகக்கிடைக்கின்றபடியால். இப்போது நெசவுத் தொழிலை மட்டும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆரணி, வாலாஜாப்பேட்டை முதலிய இடங்களில் விலையுயர்ந்த பட்டுப் புடவைகளும் வேஷ்டிகளும் நெய்கிறார்கள். வாலாஜாப்பேட்டையில் ரங்காரியார் என்கிற ஜாதியார்கள் துணிகளுக்குச் சாயம் ஏற்றுகிறார்கள். இன்னும்



நெசவு வேலை.

அநேக இடங்களில்,முகம்மதியர்கள் கட்டும் லுங்கி என்ற துணியும் நெய்யப்படுகின்றன.

வேலூர் சிறைச்சாலையில் கைதிகளைக்கொண்டு நேர்த்தியான ஜமக்காளங்கள் நெய்து, அவற்றில் பெரும்பாகத்தை அயல் நாட்டுக்கு அனுப்புகிறார்கள்.

வந்தவாசித்தாலூகாவில் கோரை விசேஷமாகப் பயிராகிறது. இதைக் கொண்டு நேர்த்தியான பாய்கள் செய்கிறார்கள்.

வேலூர், ஆற்காடு முதலிய இடங்களில் பித்தளை, வெண்கலம் முதலிய உலோகங்களால் பாத்திரங்கள் செய்கிறார்கள்.

ராணிப் பேட்டையிலுள்ள பாரி கம்பெனியில் மண்ஜாடிகளும், சில திராவகங்களும், ஆடுமாடுகளின் எலும்புகளைக்கொண்டு ஓர்சிறந்த உரமும் செய்கிறார்கள்.

இந்த உரத்தை வயல்களுக்கு உபயோகப் படுத்தினால் பயிர் விசேஷமாக விருத்தியடையும். ராணிப்பேட்டை, ஆம்பூர், வாணியம்பாடி முதலிய இடங்களில் பல முகம்மதியர் தோல்

பதனிடும் தொழிலை மேற்கொண்டிருக்கிறார்கள். ராணிப்பேட்டையைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் மாமிச ஆகாரம் புசிப்பவர்கள் அநேகர் இருப்பதால்தான் அவ்விடத்தில் தோல் பதனிடும் தொழிலும், எலும்புத் தூள் உரம் செய்யும் தொழிலும் நடைபெறுகின்றன.

நமது ஜில்லாவில் விவசாயிகள் விவசாயக்காலம் போக மற்ற நாட்களில் வீண்பொழுது போக்கவேண்டியிருக்கிறது. தவிர, ஸ்திரீகளும்



கைராட்டினம்.

அநேகமாக வீண்பொழுது போக்குகிறார்கள். ஆகையால் இவர்கள் மகாத்மா காந்தியவர்கள் சொல்வது போல், கைராட்டினத்தில் நூல் நூற்றல் முதலிய குடிசைத் தொழில்களைச் செய்தால், தங்கள் வருமானத்தை அதிகரித்துக் கொண்டு சந்தோஷமாக வாழக்கூடும்.

வியாபாரம்.

உங்களில் அநேகரின் பெற்றோர்களுக்குச் சொந்த நிலம் இருக்கிறதல்லவா? அவைகளில் விளையும் தானியங்களில் கொஞ்ச பாகத்தைச் சொந்த உபயோகத்திற்காகவைத்துக் கொண்டு, மீதியை விற்று, தேவையான துணி முதலிய அநேக பொருள்களை வாங்கிக்கொள்கிறார்கள் அல்லவா? அதே போல் நமது ஜில்லாவில் நமக்குத் தேவையில்லாத பொருள்களை வெளியிடங்களுக்கு அனுப்பிவிட்டு, நமது ஜில்லாவில் கிடைக்காத நமக்குத் தேவையான பொருள்களை வெளியிடங்களிலிருந்து வரவழைத்துக் கொள்ளுகிறோம். இதற்கு வியாபாரம் என்று பெயர். சாமான்களை வெளியூருக்கு அனுப்புவதை ஏற்றுமதி என்றும், வெளியூரிலிருந்து சாமான்களை வரவழைப்பதை இறக்குமதி என்றும் சொல்லுவதுண்டு.

உப்பு, புளி, மிளகாய், புகையிலை, துணிகள், கிரஸின் ஆயில், தீப்பெட்டி, கண்ணாடிச்சாமான்கள், உங்களுக்கு வேண்டிய சிலேட்டுகள், காகிதம், பென்சில்கள் இவைகள் வெளிநாடுகளிலிருந்து வரவழைக்கப்படுகின்றன.

பயிற்சிக் கேள்விகள்.

1. நமது ஜில்லாவில் நூல் நூற்பது, அவுரி பயிரிடுவது இந்தத் தொழில்களை விட்டு விட்டார்கள். ஏன்?
2. வெண்கலம், பித்தளை முதலிய பாத்திரங்கள் எங்கெங்கு செய்யப்படுகின்றன?
3. உங்கள் ஊரில் முக்கிய கைத்தொழில்கள் எவை?
4. உங்கள் ஊரிலிருந்து எந்தெந்தச் சாமான்கள் வெளியே அனுப்பப்படுகின்றன? இவைகளை எந்தவிதத்தில் வெளியூருக்கு அனுப்புகிறார்கள்?
5. நம் ஜில்லாவிலிருந்து வெளியிடங்களுக்கு அனுப்பப்படும் பொருள்களும், அவைகள் உண்டாகும் இடங்களும் மாற்றிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைச் சரியாக எழுதுக:—

ஜமக்காளங்கள்.	வாலாஜாப்பேட்டை.
உரம்.	வாணியம்பாடி.
தோல்.	வேலூர்.
வெல்லம்.	சாத்துக்குடி.
கோரைப்பாய்கள்.	வந்தவாசி.
ஆரஞ்சுப்பழம்.	ராணிப்பேட்டை.

நமது ஜில்லாவிலிருந்து கீழ்க்கண்ட சாமான்கள் வெளியிடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

நெ.	தாலூகாக்கள்.	ஏற்றுமதிச் சாமான்கள்.
1	அரக்கோணம்	கம்பு, கேழ்வரகு, நெல், நிலக்கடலை.
2	வாலாஜாப்பேட்டை	மாம்பழம், வெற்றிலை, பட்டுச்சேலைகள், வஸ்திரங்கள், ஜாடிகள், திராவகங்கள், எலும்பு உரம், பித்தளைப் பாத்திரங்கள், வெல்லம், தோல், நெல்.
3	செய்யாறு	எள், வஸ்திரங்கள், நெல்.
4	வேலூர்	எள், கோரைப் பாய்கள், வஸ்திரங்கள், கேழ் வரகு, நெல்.
5	வந்தவாசி	வெற்றிலை, மாம்பழம், ஜமக்காளம், பித்தளைப் பாத்திரங்கள், தோல், நெல், புகையிலை.
6	குடியாத்தம்	மாம்பழம், ஆரஞ்சுப்பழம், தோல், வெல்லம், பழுப்புச் சர்க்கரை, புளி, புகையிலை, நிலக்கடலை.
7	திருப்பத்தூர்	துவரை, கொடி முந்திரிப்பழம், தோல், கேழ்வரகு, புளி, மரவகைகள், தேன், தோல்பதனிடும் பட்டைகள்.
8	போளூர்	புகையிலை, உளுந்து, துவரை, காட்டுச் சாமான்களான சந்தன மரம், கருங்காலி மரம், தேன், மெழுகு, தோல் பதனிடும் பட்டை.
9	ஆரணி	பட்டுச் சேலைகள், வஸ்திரங்கள், நிலக்கடலை, நெல்.
10	திருவண்ணாமலை	காட்டுச் சாமான்கள், கம்பு, கேழ்வரகு, மிளகாய், புகையிலை, நிலக்கடலை.
11	செங்கம்	காட்டுச்சாமான்கள், கடுகு, நிலக்கடலை, கேழ்வரகு.

ஏழாம் பாடம்.

ஜனங்கள், மதம், பாஷை.

நமது ஜில்லாவின் ஜனத்தொகை சுமார் 22½ லக்ஷம் என்று கணக்கெடுத்திருக்கிறார்கள். இவர்களில் சுமார் 19½ லக்ஷம் இந்துக்களும், 1½ லக்ஷம் முகமதியர்களும், 50 ஆயிரம் கிறிஸ்தவர்களும், 10 ஆயிரம் ஜெயினர், புத்தர்களும், மீதி இதரர்களுமாவார்கள். முகமதியர்கள் பாலாற்றுப்பிரதேசத்தில், மற்ற இடங்களைவிட அதிகமாகவும், கிறிஸ்தவர்கள் விசேஷமாகப் போளூர், திருவண்ணாமலை தாலூகாக்களிலும், ஜெயினர், புத்தர்கள், ஆரணி, செய்யாறு, போளூர், திருவண்ணாமலை, வந்தவாசி இந்தத் தாலூகாக்களில் விசேஷமாகவும் இருக்கின்றார்கள்.

ஒரு தாலூகாவின் விஸ்தீரணத்தால் அந்தந்தத் தாலூகாவின் மொத்த ஜனத்தொகையை வகுத்தால் அந்தந்தத் தாலூகாவில் சதுரமைலுக்குள்ள ஜனநெருக்கத்தை அறியலாம். இப்படிப்பார்க்குங்கால், ஆரணி, வேலூர், வாலாஜாப்பேட்டை தாலூகாக்களில் சதுரமைலுக்கு ஜனநெருக்கம் 600க்கு மேலும், செங்கம் தாலூகாவில் 250க்குக் குறைவாகவும், மற்ற இடங்களில் சுமார் 400க்கு மேலும் இருக்கின்றன. ஆரணியில் மட்டும் சதுர மைலுக்கு 780 பேர்கள் வசிக்கிறார்கள். நமது ஜில்லாவில் ஆரணி தான் மிகவும் ஜனநெருக்கமான பாகம்.

நமது ஜில்லாவில் முக்கியமாகப் பேசும் பாஷை தமிழ். முகமதியர்களில் அநேகர் தமிழும், சிலர் உருதுபாஷையும் பேசுகிறார்கள். மிகச் சில ஜனங்கள் தெலுங்கும் பேசுகிறார்கள்.

பயிற்சிக்கேள்விகள்.

1. நமது ஜில்லாவிலுள்ள முக்கிய மதத்தினர்கள் யார்? அவர்கள் எந்தெந்தத் தாலூகாக்களில் விசேஷமாக வசிக்கிறார்கள்?
2. உங்கள் ஊரில் எந்த ஜாதியார்கள் அதிகமாக இருக்கிறார்கள்?
3. ஓர் இடத்தின் ஜனநெருக்கத்தை எப்படியறியலாம்?
4. கீழ்க்கண்ட அட்டவணையிலிருந்து, நமது ஜில்லாவில் ஜனநெருக்கம் அதிகமாக உள்ள இடம், மிகக் குறைந்த இடம் இவைகளைக் கூறுக. உங்கள் தாலூகாவில் ஜனநெருக்கம் எவ்வளவு?

நெ.	தாலூகா	ஒரு சதுர மைலுக்கு ஜனநெருக்கம்
1	ஆரணி ஜாகீர்	781
2	அரக்கோணம்	584
3	வந்தவாசி	568
4	செங்கம்	249
5	செய்யாறு	536
6	குடியாத்தம்	494
7	போளூர்	355
8	திருப்பத்தூர்	481
9	திருவண்ணாமலை	495
10	வேலூர்	601
11	வாலாஜாப்பேட்டை	649

5. அதிக ஜனநெருக்கமுள்ள பிரதேசத்தின் பெயரை முதலில் எழுதி, மற்றவைகளை வரிசைக் கிரமத்தில் எழுது.

எட்டாம் பாடம்.

மலைப்பிரதேசம்.

பிள்ளைகளே! இரண்டாவதுபாடத்தின் கடைசியில் நமது ஜில்லாவை நான்கு பிரிவுகளாகப் பிரித்தோம் அல்லவா? அவற்றில் ஒவ்வொன்றையும் பற்றி இப்பொழுது படிப்போம். இப்பாடத்தில் முதல் பிரதேசமாகிய மலைப்பிரதேசத்தைக் கவனிப்போம்.

ஜவ்வாது மலையும், அதையடுத்த பிரதேசமும் சேர்ந்து மலைப்பிரதேசம். படத்தைப்பார்த்துஇதில்எந்தெந்தத் தாலூகாக்கள் அடங்கி யிருக்கின்றன என்று சொல்லுங்கள். இப்பிரதேசம் காடுகள் அடர்ந்ததாக இருப்பதாலும், ஒருவித விஷக் காற்றினால் இங்கு அடிக்கடி விஷ ஜுரம் உண்டாவதாலும், இங்கு அதிக ஜனங்கள் வசிப்பதில்லை. காடுகளில் சில துஷ்டமிருகங்கள் இருக்கின்றன.

அங்கங்கே யுள்ள சில கிராமங்களில் மலையாளிகள் என்ற ஜாதியார்கள் வசிக்கிறார்கள். இவர்கள் அவ்வளவு நாகரிகமானவர்கள் அல்ல. இவர்கள் பேசுவது தமிழ்ப் பாஷை. இவர்கள் சாமை, கடுகு, கஞ்சாத்தழை, துவரை, உளுந்து, இவைகளைப் பயிரிடுகிறார்கள். காடுகளில் கிடைக்கும் மூங்கில், சந்தன மரம், அரக்கு, சீயக்காய், மூலிகைகள், ஆவாரம்பட்டை, தேன், மெழுகு, கடுக்காய் இவைகளைச் சேகரித்துச் சமீபத்தில் சமவெளிகளிலுள்ள பட்டணங்களுக்குக் கொண்டு போய் விற்றுத் தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள், துணிகள், இவைகளை வாங்கிக் கொள்வார்கள். இப்பட்டணங்களில் முக்கியமானவை ஒடுகத்தூர், ஆலங்காயம், செங்கம், மூலக்காடு என்பவை.

காடுகளையடுத்த பிரதேசங்களில் மழை சுமாராகப் பெய்வதுண்டு. ஆகையால் இந்த மேட்டுப்பிரதேசத்தின் காடுகளைச் சுற்றிப் புல்வெளிகள் விசேஷமாக இருக்கின்றன. புல் விசேஷமாக உள்ள இடங்களில் ஆடுமாடு அதிகமாக வளர்க்கக்கூடுமல்லவா? எனவே இதைச்சுற்றியுள்ள சில இடங்களில் தோல்பதனிடுதல், கம்பளம் நெய்தல் முதலிய தொழில்கள் நடக்கின்றன. இந்தப் பிரதேசங்களில் போக்குவரவு சாதனங்கள் குறைவு. ஏன்? மலைநாடுகளில் சாலை, ரயில்பாதை இவைகள் போடுவது கஷ்டம்.

பயிற்சிக் கேள்விகள்.

1. மலைப்பிரதேசத்தில் எந்தெந்தத் தாலூகாக்கள் அடங்கியிருக்கின்றன?
2. இந்தப்பிரதேசத்தில் ஏன் அதிக ஜன நெருக்கம் இல்லை?
3. மலைக்காடுகளில் கிடைக்கும் வஸ்துக்கள் எவை? இவைகளின் உபயோகம் என்ன?
4. ஒடுகத்தூர், ஆலங்காயம், செங்கம், மூலக்காடு இவைகள் ஏன் முக்கியமாயின?
5. இக்காடுகளைச் சுற்றி ஆடுமாடுகளை விசேஷமாக வளர்க்கிறார்கள். ஏன்?
6. இப்பிரதேசத்தில் போக்குவரவு மார்க்கங்கள் ஏன் மிகக் குறைவாக இருக்கின்றன?

ஒன்பதாம் பாடம்.

மேட்டுப் பிரதேசம்.

ஜவ்வாது மலைப்பிரதேசத்தைச் சுற்றியுள்ள பிரதேசமே மேட்டுப்பிரதேசம்எனப்படுவது.படத்தைப்பார்த்து, இதில் எந்தெந்தத் தாலூகாக்களின் பாகங்கள் அடங்கியிருக்கின்றன என்று சொல்லுங்கள். இப்பிரதேசத்தில்அதிக மழை கிடையாது. இதற்குக் காரணம் வடகிழக்கிலிருந்து



வட ஆற்காடு ஜில்லா
இயற்கைப் பிரதேசங்கள்
ஸ்கேல் 1 அங்—14 மைல்கள்
சித்தூர் ஜில்லா
வ
மே
கி
தெ
அரக்கோணம்
பாலாற்றுப் பிர தேசம்
குடியாத்தம்
வாலாஜா
பேட்டை
பாலாறு
வேலூர்
செங்கற்பட்டு
ஜில்லா
ஆரணி
செய்யாறு
மலைப்பிரதேசம்
திருப்பத்தூர்
போளூர்
செய்யாற்றுப் பிரதேசம்
வந்தவாசி
மேட்டுப் பிரதேசம்
சேலம் ஜில்லா
செங்கம்
திருவண்ணா
மலை
தென் ஆற்காடு ஜில்லா

மிருகங்கள்.



புலி



குரங்கு



சிவிங்கிப்புலி



மான்

விளைபொருள்கள்.

நெல்



கரும்பு



கம்பு



கேழ்வரகு



நிலக்கடலை



கொடிமுந்திரிப்பழம்



வாழை



புகையிலை

வரும் மழைக்காற்று, செங்கற்பட்டு ஜில்லாவிலும், நம் ஜில்லாவின் சம வெளிகளிலும் அதிக மழையைப் பொழிந்துவிட்டு, இப்பிரதேசத்திற் குச் சொற்ப மழையையே கொடுக்கி றது. தென் மேற்கிலிருந்து வரும் மழைக்காற்று நமது மாகாணத்தின் மேற்குக்கரை யோரமாக உள்ள மலை களினால் தடுக்கப்படுவதால் அக்காற் றினாலும் இப்பிரதேசத்திற்கு அதிக மழை கிடையாது. ஆறுகளும் இங்கு அதிகமாக இல்லை. மழை பெய்யும் காலங்களில் மலைகளிலிருந்து ஓடி வரும் காட்டாறு ஜலத்தை ஏரிகளில் நிரப்பி, ஜனங்கள் பயிரிடுகிறார்கள்.

மேற்சொன்ன ஏரிகளின் சமீப மாக மட்டும் கொஞ்சம் நெல் பயிரிடப்படுகிறது. மற்ற இடங்களில் புன்செய்ப்பயிர்களே முக்கிய மானவை. திருப்பத்தூர் தாலுகா வில் துவரை விசேஷமாகப் பயிரிடப் பட்டு, பல இடங்களுக்கு அனுப்பப் படுகிறது. கம்பு, சோளம், உளுந்து, நிலக்கடலை, கேழ்வரகு இவைகளும் பயிரிடுகிறார்கள். தெற்குப்பாகத்தில் புகையிலையும் விசேஷமாகப் பயிரிடுகி றார்கள். குடியாத்தத்திலும், அதை யடுத்த மற்ற இடங்களிலும் மாமரம், புளியமரம், இவை ஏராளமாக இருக் கின்றன. இந்தப் பிரதேசத்தில் கிடைக்கும் மற்ற பழவகைகள் ஆரஞ்சு, எலுமிச்சை, பச்சைத் திராட்சை முதலியன. இவைகள் கிடைக்குமிடங்களைப்பற்றி ஏற் கனவே சொல்லியிருக்கிறோம்.

இப்பிரதேசத்தில் பல விடங்களில் செழிப்பான புல்வெளிகள் இருக்கின் றன. இவ்விடங்களில் ஆடுமாடுகளை விசேஷமாக வளர்க்கிறார்கள். அதிக உரோமத்தையுடைய குறும்பாடு என் னும் ஆட்டை விசேஷமாக வளர்க்



குறும்பாடு.

கிறார்கள். இதன் உரோமத்தைக் கொண்டு திருப்பத்தூரை யடுத்த மோட்டூரிலும், செங்கத்தை யடுத்த புதுப்பாளையத்திலும், போளூரை யடுத்த ஆத்வாம்பாடியிலும் கம்பளங் கள்நெய்கிறார்கள்.

இந்தப்பிரதேசத்திலுள்ள முக்கிய பட்டணங்கள் திருப்பத்தூர், ஜோலார் பேட்டை, மோட்டூர் முதலியவை. இவைகளைப்பற்றிய விவரங்கள் பின்பு தெரிந்துகொள்வோம். இந்தப் பிர தேசத்திலும் போக்குவரவு மார்க்கங் கள் குறைவு.

பயிற்சிக் கேள்விகள்.

1. மேட்டுப் பிரதேசத்தில் எந்தெந்தத் தாலுகாக்களின் பாகங்கள் அடங்கியிருக் கின்றன?

2. இப்பிரதேசத்தில் நன்செய்ப் பயிர்கள் ஏன் விசேஷமாக இல்லை?

3. இப்பிரதேசத்தில் கிடைக்கும் முக்கியப் பழவகைகள் எவை?

4. கம்பளங்கள் எங்கெங்கு நெய்கிறார்கள்?

பத்தாம் பாடம்.

பாலாற்றுப் பிரதேசம்.

நமது ஜில்லாப்படத்தைப்பார்த்துப் பாலாற்றின் போக்கைக் கவனியுங்கள். இது மைசூர் சமஸ்தானத்தில் உற்பத்தியாகி, நமது ஜில்லாவில் திருப்பத்தூர் தாலூகாவில் பிரவேசித்து, வேலூர், வாலாஜாப்பேட்டை, செய்யாறு தாலூகாவின் வழியாகப் பாய்ந்து, செங்கற்பட்டுஜில்லாவில் பிரவேசித்துக் கடைசியாகக் கடலில் கலக்கின்றது. இந்த ஆற்றிற்கு வடக்கேயும், தெற்கேயும் மலைகள் அடர்ந்திருப்பதால், அங்கே பெய்யும் மழை ஜலமெல்லாம் இந்த ஆற்றிலேயே வந்து கலக்கின்றது. இதன் முக்கிய உபநதிகள் எவை? இவைகள் எந்தெந்த இடங்களில் பாலாற்றுடன் கலக்கின்றன?

மழைக்காலத்தில் மட்டும் பாலாற்றிலும், அதன் உபநதிகளிலும் அதிகத் தண்ணீர் ஓடுகின்றது. அக்காலங்களில் தண்ணீரை அணைகளால்தேக்கி, ஏரிகளில் நிரப்பிச் சாகுபடி செய்கிறார்கள் என்று சொன்னோமல்லவா? ஆற்காட்டுக்குக்கிழக்கே, சுமார் 4 மைல் தூரத்தில் **புதுப்பாடி** என்னுமிடத்தில் பாலாற்றுக்குக் குறுக்காக அணை கட்டியிருக்கிறார்கள். இந்த அணைக் கட்டிலிருந்து காவேரிப்பாக்கம் ஏரி, மாமண்டூர் ஏரி முதலிய 270 ஏரிகளுக்குத் தண்ணீர் பாய்வதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். பொன்னையாற்றிலும் பொன்னை என்னுமிடத்தில் ஓர் அணை கட்டித் தண்ணீரை ஏரிகளுக்குத் திருப்பியிருக்கிறார்கள். ஆற்றில் தண்ணீர்இல்லாதகாலத்தில் ஊற்றுக் கால்வாய்களின் உதவியால் சாகுபடி செய்கிறார்கள்.

ஆறுகளையடுத்த பிரதேசம் வண்டல் மண்ணையுடையதா யிருப்பதாலும், நீர்ப்பாசன சௌகரியங்கள் இருப்பதாலும் இங்கு நன்செய்ப் பயிர்கள் விசேஷமாக உண்டாகின்றன. நெல், கரும்பு, வெற்றிலை, தென்னை, மா இவைகள் நன்றாக விளைகின்றன. ஆற்றுக்குச் சற்று தூரத்தில் நீர் வசதி அதிகமில்லாத இடங்களில் புன்செய்ப் பயிர்களாகிய கம்பு, கேழ்வரகு, வேர்க்கடலை இவைகள் உண்டாகின்றன.

இப்பிரதேசம் சமவெளியாக இருப்பதால், போக்குவரவு மார்க்கங்கள் அதிகமாகவும், சுலபமாகவும் இருக்கின்றன. கிழக்கு மேற்காக ரஸ்தாவும், ரெயில் பாதையும் ஏறக்குறைய ஆற்றையொட்டியே செல்லுவதைப் பார். இதற்குக் காரணம் ஆற்றையொட்டிய பிரதேசம், சாதாரணமாக ஆற்றினால் சமவெளியாக்கப் பட்டிருப்பதால், இவ்விடத்தில் பாதைகள் அதிகச்செலவும், கஷ்டமும் இன்றிப் போடக்கூடும்.

இப்பிரதேசம் செழிப்பாயும் போக்கு வரவு மார்க்கங்கள் அதிகமாயுமிருப்பதால், இங்கே அநேக கைத்தொழில்களும், வியாபாரமும் நடக்கின்றன. பேரணம்பட்டுக்கருகில் பூராச் சர்க்கரையும், வாலாஜாப் பேட்டைக்கருகில் வெல்லம், துணி, இவைகளும் செய்கிறார்கள். மலைப்பிரதேசத்திலுள்ள புல்வெளிகளில் ஆடு மாடுகள் விசேஷமாக வளர்க்கிறார்கள் என்று சொன்னோமல்லவா? ஆகையால், அந்தப் புல்வெளிகளை யடுத்த **வாணியம்பாடி, ஆம்பூர், பேரணம் பட்டு, குடியாத்தம்** முதலிய இடங்களில் தோல் பதனிடுதல் முக்கியத் தொழில். ராணிப்பேட்டையிலும்

தோல் பதனிடுகிறுர்கள். ராணிப் பேட்டையில் உரம், ஜாடி, திராவகங் கள் முதலியவைகள்செய்வதைப்பற்றி முன்பே படித்தோம்.

ஆற்ருேரத்தில் பூமி செழிப்பாயும், ஜலவசதி உள்ளதாயும், போக்கு வரவுக்கு அநுகூலமாயுமிருப்பதால் பாலாற்றின் கரையில் அநேக பட்ட ணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவை களில் முக்கியமானவை **வாணியம் பாடி, ஆம்பூர், பள்ளிகோண்டை, வேலூர், ஆற்காடு, இராணிப்பேட்டை, வாலாஜாப்பேட்டை.**

பயிற்சிக் கேள்விகள்.

1. பாலாற்றின் முக்கிய உபநதிகள் எவை? அவைகள்எந்தெந்தஊருக்குச்சமீபத்தில் பாலாற்றுடன் கலக்கின்றன?
2. இந்தப் பிரதேசத்தில் நன்செய்ப்பயிர்கள் ஏன் விசேஷமாக உண்டாகின்றன?
3. கிழக்கு மேற்காகச் செல்லும் ரஸ்தாவும் ரயில்பாதையும்ஏன்பாலாற்றை யொட்டிச் செல்கின்றன?
4. ஆற்றின் கரையின் மேல் சாதாரணமாகப் பட்டணங்கள் ஏற்படுகின்றன. ஏன்?
5. கீழ்க்கண்ட வாக்கியங்கள் சரியா, தப்பா என்பதைக் கூறுக:—
   - i பாலாற்றின் குறுக்கே பொன்னை என்னு மிடத்தில் ஓர் அணைக்கட்டு இருக்கிறது.
   - ii நீர் வசதி அதிக மில்லாத இடங்களில் புன்செய்ப்பயிர்கள் உண்டாகின்றன.
   - iii வாலாஜாப்பேட்டையில் பூராச் சர்க்கரை செய்கிறுர்கள்.
   - iv வாணியம்பாடியில் தோல் பதனிடும் தொழில் நடைபெறுகிறது.

பதினேராம் பாடம்.

செய்யாற்றுப்பிரதேசம்.

இந்தப்பிரதேசம் ஜவ்வாது மலை யினுலும், மேட்டுப்பிரதேசத்தினுலும் பாலாற்றுப்பிரதேசத்திலிருந்து பிரிக் கப்படுகிறது. செய்யாறு பாலாற்றின் ஓர் முக்கிய உபநதி என்று முன்பே கூறியிருக்கிருேம். இது ஜவ்வாது மலையில் உற்பத்தியாகி, செங்கம், போளூர், ஆரணி, வந்தவாசி, செய் யாறு தாலூகாக்கள் வழியாகப் பாய் கிறது. இதில் கடைசி மூன்று தாலூ காக்கள் மட்டுமே சமவெளிப் பிர தேசம். இதன் முக்கிய உபநதிகளா கிய கமண்டல நதி, நாகநதி இவை கள் ஒன்று சேர்ந்து, கமண்டல நாக நதி என்ற பெயருடன் **வாழைப் பந் தல்** என்னும் கிராமத்துக் கருகில் செய்யாற்றுடன் கலக்கிறது. செய் யாறு, பிறகு செங்கல்பட்டு ஜில்லா வில் பிரவேசித்து, பாலாற்றுடன் கலக்கிறது.

இந் நதியில் வருஷந்தோறும் அதிக வெள்ளம் வருவதாலும், இந் நதி வண்டல் மண்ணை அடித்துக் கொண்டு வருவதாலும், இப்பிரதே சம் செழிப்பாக இருக்கிறது. பாலா ற்றைப்போலவே இங்கேயும் மழைக் காலங்களில்அணைக்கட்டுகளால் தண் ணீரை ஏரிகளில் தேக்கியும், மற்ற காலங்களில் ஊற்றுக் கால்வாய்களா லும் நன்செய்ப் பயிர்களாகிய நெல், கரும்பு, வெற்றிலை, தென்னை இவை கள் பயிரிடப்படுகின்றன. மேடான சில இடங்களில் சவுக்கும் பயிரிடு கிருர்கள்.

பயிர்த் தொழிலைத்தவிர, சில கைத் தொழிலும் இப்பிரதேசத்தில் நடை பெறுகின்றன. **ஆரணி, திருவத்திபுரம்** இவ்விடங்களில் நெசவுத் தொழி லும், **வந்தவாசி, குண்ணத்தூர்** இவ்

விடங்களில் கோரைப்பாய்கள் செய்வதும் முக்கியமான தொழில்கள். இப்பிரதேசத்திலுள்ள ஆரணி ஜாகீரே நமது ஜில்லாவில் மிகவும் ஜன நெருக்கமான பாகம். இப்பிரதேசத்திலும் போக்கு வரவுக்காக அநேக சாலைகள் இருக்கின்றன. திருவண்ணாமலை, போளூர், ஆரணி, **வந்தவாசி**, **திருவத்திபுரம்** இவைகள் இப்பிரதேசத்தில் முக்கிய பட்டணங்கள்.

பயிற்சிக் கேள்விகள்.

1. செய்யாற்றின் முக்கிய உபநதி எது? அது செய்யாற்றுடன் எவ்விடத்தில்கலக்கிறது?
2. இப்பிரதேசத்தில் உண்டாகும் முக்கிய உணவுப்பொருள்கள் எவை?
3. இப்பிரதேசத்தில் உள்ள இரண்டு முக்கிய கைத்தொழில்களைச் சொல்லு.

பனிரண்டாம் பாடம்.

வேலூர் நகரம்.

நமது ஜில்லாவின் தலைநகரம் வேலூர். இது நமது ஜில்லாவிலேயே மிகப் பெரிய பட்டணம். இவ்விடம் ஜில்லா அதிகாரிகளாகிய கலெக்டர், ஜில்லா ஜட்ஜ், ஜில்லா போலீஸ் அதிகாரி, ஜில்லா சுகாதார அதிகாரி, ஜில்லாக் கல்வியதிகாரி இவர்கள் வசிக்கிறார்கள்.

வேலூர் பாலாற்றின் தெற்குக் கரையில் அமைந்திருக்கிறது. இதன் தென்கிழக்கு மூலையில் மலைகள் வியாபித்திருக்கின்றன. நாம் இவ்வூரைச் சுற்றிப் பார்ப்போம். இவ்வூரில் மிகவும் முக்கியமான இடம் ஓர் நேர்த்தியான கோட்டை. இது சுமார் 700 வருஷங்களுக்கு முன் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. கோட்



வேலூர் டவுன்

1. பஸ் ஸ்டாண்டு 2. மிஷன் ஆஸ்பத்திரி
3. மார்க்கட்டு 4. சர்க்கார் ஆஸ்பத்திரி
5. மகந்துஹைஸ்கூல் 6. ஊர் ஹீஸ்காலேஜ்
7. தபால் ஆபீஸ் 8. ஜில்லாபோர்டு ஆபீஸ்
9. கவர்ன்மெண்டு மகம்மதிய ஸ்கூல்
10. கலெக்டர் பங்களா
11. கால் நடை வைத்தியசாலை
12. நகரசபை (முனிசிபல் ஆபீஸ்)



டையும், அதைச் சுற்றிய தண்ணீர் நிறைந்த ஆழமான அகழும் எவ்வளவு அழகாகக் காணப்படுகின்றன! அகழின்மேல் கட்டப்பட்டிருக்கும் ஒரு பாலத்தின் வழியாக உள்ளே செல்வோம். அங்கே மிக அழகிய கோவில் ஒன்று இருக்கின்றது. அதைத்தவிர, இவ்விடம் அநேக ஜில்லா அதிகாரிகளின் ஆபீஸ்களும் இருக்கின்றன.

கோட்டைக்கு வடக்குப் புறமாக, ஓர் சாலை செல்வதைப்பார். இதில் மேற்குப்புறமாகச் சென்றால் வலது புறத்தில் கால் நடைகளுக்கான வைத்தியசாலையைக் காண்கிறோம். பிறகு இந்தச் சாலையானது வேலூருக்கு வடக்கேயுள்ள காட்பாடி என்னுமிடத்திலிருந்து வரும் ரயில் பாதையைத் தாண்டி, குடியாத்தம், வாணியம்பாடி முதலிய இடங்களுக்குச் செல்லுகிறது. ரயில்பாதையைத் தாண்டியவுடன் சாலைக்கு வடபுறமாகச் சேண்பாக்கம்என்ற கிராமம் இருக்கிறது. இவ்விடத்திலுள்ள விநாயகர் கோவில் மிகப் பெயர் பெற்றது.

கோட்டையிலிருந்து இந்தச் சாலை வழியாகக் கிழக்கே செல்வோமானால் அமெரிக்கப்பாதிரிகளால் நடத்தப்படும் பெரிய வைத்தியசாலையொன்றைக் காண்கிறோம். பிறகு இந்தச் சாலை ஆற்காடு வழியாகச் சென்னை பட்டணத்திற்குப் போகின்றது. இந்தப் பாதை செல்லும் சமவெளி, குன்றுகளுக்கும், ஆற்றுக்கும் மத்தியில் மிகவும் குறுகலாக இருப்பதைக் கவனி. இந்தக் குன்றுகளின் மேல் சில பழைய கோட்டைகள் இருக்கின்றன.

கோட்டைக்குப் பின்புறமாக ஓர் இருப்புப்பாதை செல்வதைக் கவனி. இது காட்பாடியிலிருந்து வேலூர் வழியாகத் திருவண்ணாமலைக்குச் செல்லுகிறது. வேலூருக்கு இரண்டு ரயில்வே ஸ்டேஷன்கள் இருக்கின்றன. கோட்டைக்குப் பின்புறத்தில் இருப்பது டவுன் ஸ்டேஷன். இதற்குச் சுமார் ஒரு மைல் தெற்கேயிருப்பது கண்டோன்மென்டு என்ற பெரிய ஸ்டேஷன். கோட்டைக்குக் கிழக்கே முன்புறத்திலும், தெற்கிலும் ஓர் மைதானம் இருப்பதைப் பார். இவ்விடத்தில் சாயங்கால வேளைகளில் பள்ளிக்கூட மாணவர்களும், மற்றவர்களும் அநேக விதமான பந்து விளையாட்டுகள் விளையாடுகிறார்கள்.

இந்த மைதானத்துக்குச் சற்று வட கிழக்கே மோட்டார் பஸ்கள் நிற்குமிடத்தைப்பார். இவ்விடத்தில் பெங்களூர், வாணியம்பாடி, ஆம்பூர், திருவண்ணாமலை, ஆரணி, ஒடுகத்தூர், ஆற்காடு, திண்டிவனம், வந்தவாசி, அரக்கோணம், சென்னை முதலிய இடங்களுக்குச் செல்லும் மோட்டார் பஸ்கள் நிற்கின்றன.

பஸ் ஸ்டாண்டுக்குத் தெற்கே ஒரு பெரிய மார்க்கட்டு இருக்கிறது. மார்க்கட்டுக்குக் கிழக்குப்புறத்தில் ஓர் ரஸ்தா, தெற்குவடக்காகச்செல்வதைக் கவனி. இது வடக்கே காட்பாடியிலிருந்து ஓர் நீண்ட பாலத்தின் வழியாகப் பாலாற்றைக்கடந்து, வேலூருக்குள் பிரவேசித்து, கோட்டைக்குச் சமீபத்தில் இரண்டாகப்பிரிந்து, பஸ் ஸ்டாண்டுக்கு இருபுறத்திலும் நேர் தெற்காகச் சென்று, பிறகு ஊரின் தெற்குக் கோடியில் ஒன்று சேர்ந்து, தெற்கே திருவண்ணுமலை முதலிய இடங்களுக்குச் செல்கிறது. மார்க்கட்டுக்குக் கிழக்கேயுள்ள சாலையில் தானியம் முதலிய பல பெரிய மண்டிகளும், பெரிய கடைகளும் இருக்கின்றன. இங்கிருந்து ஓர் பாதை கிழக்காகப் பிரிந்து ஆற்காட்டுக்குச் செல்லும் சாலையுடன் சேருகின்றது. இதில் அநேக ஜவுளிக் கடைகள், பாத்திரக்கடைகள், நகைக் கடைகள் முதலியவை இருக்கின்றன.

கோட்டையின் கிழக்கு ஓரமாகவே தெற்கு நோக்கி ஓர் பாதை செல்கிறதல்லவா? இதன் வழியாகச் சென்ருல் அநேக கடைகளைக் காண்கிருேம். பிறகு முனிசிபல் ஆபீஸ், பாதிரிமார்களால் நடத்தப்படும் ஊர் ஹீஸ் காலேஜ் என்ற ஓர் உயர்தரக் கல்லூரியும், ஓர் ஹைஸ்கூலும், திருப்பதி ஸ்ரீ மகந்துவினுல் நடத்தப்படும் ஓர் ஹைஸ்கூலும், சர்க்காரால் மகம்மதியப் பிள்ளைகளுக்காக நடத்தப்படும் ஓர் ஹைஸ்கூலும், ஜில்லா போர்டு ஆபீசும், ஜில்லாக் கல்வியதிகாரி ஆபீசும், கலெக்டர் பங்களாவும் இந்தச் சாலையில் இருக்கின்றன. இவைகளைத்தவிர, சர்க்காரால் பெண்களுக்காக நடத்தப்படும் ஒரு ஹைஸ்கூலும், பாதிரிகளால் பெண்களுக்காகநடத்தப்படும்ஓர்வைத்தியக் கல்லூரியும் இவ்வூரில்இருக்கின்றன.

மறுபடி இந்தச் சாலையிலேயே தெற்கே சென்ருல் தொரப்பாடி என்ற இடத்துக்கு வருகிருேம். இவ்விடத்தில் ஓர் பெரிய சிறைச்சாலை இருக்கிறது. இங்குள்ள கைதிகள் அழகிய ஜமுக்காளங்கள் நெய்கிருர்கள் என்று முன்பு படித்தோமல்லவா? பெண் கைதிகளும் நூல்நூற்கிருர்கள். இந்தச் சிறைச்சாலைக்குக் கிழக்கேயுள்ள ஓர் பெரிய ஏரியிலிருந்து குழாய்கள்மூலமாக வேலூர் வாசிகளுக்குக் குடிக்கும் தண்ணீர் கொண்டுபோகப்படுகிறது. நாளுக்கு நாள் வேலூர் பல வழிகளிலும் விருத்தியாகிக்கொண்டு வருகிறது.

பயிற்சிக் கேள்விகள்.

1. வேலூர், பாலாற்றுக்கு எந்தக் கரையில் அமைந்திருக்கிறது?
2. வேலூர் கோட்டை எக்காலத்தில் கட்டப்பட்டது? இதில் இருக்கும் முக்கிய கட்டடங்கள் எவை?
3. வேலூரில் எத்தனை ஹைஸ்கூல்கள் இருக்கின்றன?
4. வேலூரில் எப்பாகத்தில் சிறைச்சாலை உள்ளது? அப்பாகத்துக்குப் பெயர் என்ன?
5. இவ்வூருக்கு எந்த இடத்திலிருந்து குடிக்கும் தண்ணீர் கொண்டு வரப்படுகிறது?
6. வேலூர் என் ஒரு பெரிய வியாபாரஸ்தலமாக இருக்கிறது.

பதிமூன்றாம் பாடம்.

ஜில்லாவின் சுற்றுப் பிரயாணம்.

பிள்ளைகளே! ஒருவன் ஜில்லாவின் முக்கியத் தோற்றங்களை அறிய விரும்பினால், அவன் அந்த ஜில்லாவைச் சுற்றிப்பார்ப்பது அவசியம். அப்படிச் சுற்றிப் பார்க்க அநேக வசதிகள் இருக்கின்றன. அவையாவன:—கடல் மார்க்கம், சாலை மார்க்கம், இருப்புப்பாதை மார்க்கம்.

நமது ஜில்லாவுக்குக் கடற்கரை கிடையாது. நாம் சாலைகள் மார்க்கமாகவும், ரயில் மார்க்கமாகவும் நமது ஜில்லாவைச் சுற்றிப்பார்க்கலாம். நமது ஜில்லாவில் சுமார் 1250 மைல் நீளமுள்ள சாலைகள் இருக்கின்றன. அவற்றில் 1000 மைல் நீளத்திற்குக் கப்பிக்கல் போட்ட நல்ல ரஸ்தாக்கள் இருக்கின்றன. இருப்புப்பாதைகள் நமது ஜில்லாவில் கிழக்கு மேற்காகச் சுமார் 150 மைல் தூரமும், தெற்கு வடக்காகச் சுமார் 70 மைல் தூரமும் இருக்கின்றன.



மாட்டுவண்டி.

சாலை மார்க்கம்.

முதலாக நாம் ரஸ்தா வழியாக நமது ஜில்லாவைச் சுற்றிப்பார்ப்போம். முக்கிய ரஸ்தாக்கள் எல்லாவற்றிலும் வாடகை மோட்டார் (பஸ்) களும், சாமான் ஏற்றிச் செல்லும் லாரிகளும் ஓடுகின்றன. நாம் ஒரு மோட்டாரில் ஏறிக்கொண்டு, சுற்றுப்பிரயாணம் செய்வோம்.



மோட்டார் லாரி.



மோட்டார்கார்.

சென்னபட்டணத்திலிருந்து பெங்களூர் செல்லும் ரஸ்தாவானது நமது ஜில்லாவின் வடபாகத்தில் கிழக்கு மேற்காகச் செல்லுகிறது. இது அரக்கோணம் தாலூகாவில் நமதுஜில்லாவுக்குள்பிரவேசிக்கிறது. அதிலிருந்து வடகிழக்காக ஒரு பாதை பனப்பாக்கம், நெமிலி என்ற கிராமங்கள் வழியாக அரக்கோணத்திற்குச் செல்லுகிறது. இந்தக் கிராமங்களில் நெசவுத் தொழில் விசேஷமாக நடப்பதைக் காண்கிறோம்.

மறுபடியும் முதல் ரஸ்தா வழியாகச் சென்றால் காவேரிப்பாக்கம் என்ற ஊரை யடைகிறோம். இவ்விடத்தில் இந்த ஜில்லாவிலேயே மிகப் பெரிய தானஏரி ஒன்று இருப்பதாகச் சொன்னோமல்லவா? ஆகையால் நாம் எப்பக்கம் திரும்பினாலும் பசுமையான பயிர்கள் நிறைந்த வயல்களைக் காண்கிறோம். இவ்வூரில் ஜில்லா போர்டார் நடத்தப்படும் ஹைஸ்கூல் ஒன்று இருக்கிறது. இங்கிருந்து வடக்கேயுள்ள சோளங்கிபுரத்திற்கு ஒரு ரஸ்தா செல்வதைக் கவனி.

வட ஆற்காடு ஜில்லா
போக்குவரவு மார்க்கங்கள்
ஸ்கேல் 1 அங்—14 மைல்கள்
சித்தூர் ஜில்லா
செங்கற்பட்டு ஜில்லா
சேலம் ஜில்லா
தென் ஆற்காடு ஜில்லா
வ
மே
கி
தெ
(பம்பாயிக்கு)
சோளங்கிபுரம்
அரக்கோணம்
மன்னல்
சோளிங்கர்
நெமிலி
தக்கோலம்
காஞ்சிபுரத்துக்கு
மணப்பாக்கம்
கீஞ்சிபுரத்துக்கு
சித்தூருக்கு
போணம்பட்டு
சாத்துக்குடி
குடியாத்தம்
விரிஞ்சிபுரம்
மேல்அலத்தூர்
வளத்தூர்
மேவில்பட்டி
பள்ளிகொண்டை
பெண்ணாத்தூர்
ஆம்பூர்
ஒடுகத்தூர்
கணியம்பாடி
திமிர்
கலவை
பாலாறு
சின்னமங்கலம்
ஒண்ணுபுரம்
குண்ணத்தூர்
மாமண்டூர்
பெங்களூருக்கு
வாணியம்பாடி
சேதாரம்பட்டு
செய்யாறு
திருவத்திபுரம்
கேதாண்டபட்டி
ஆலங்காயம்
ஆரணிரோட்டு
ஆரணி
ஜோலார்பேட்டை
மாதிமங்கலம்
போளூர்
சேதாரம்பட்டு
மோட்டூர்
வந்தவாசி
கிருஷ்ணகிரிக்கு
திருப்பத்தூர்
கலசபாக்கம்
செஞ்சிக்கு
தெள்ளார்
அச்சிறுபாக்கத்துக்கு
சேலத்துக்கு
காகங்கரை
அகரம்சிப்பந்தி
திண்டிவனத்துக்கு
சேலத்துக்கு
சங்கம்
தூரிஞ்சிபுரம்
செஞ்சிக்கு
திருவண்ணாமலை
வேளாநந்தல்
தண்டரை
விழுப்புரத்துக்கு
திருக்கோயிலுக்கு
பிராட்கேஜ்
மீட்டர்கேஜ்
இருப்புப்பாதை
ரஸ்தாக்கள்
தாலூகா எல்லைகள்

பிறகு காவேரிப்பாக்கத்திற்கு 7 மைல் மேற்கேயுள்ள வாலாஜாப் பேட்டை என்ற ஊரையடைகிறோம். வழியில் செழிப்பான வயல்களைக் காண்கிறோம். இது இப்பெயர் கொண்ட தாலூகாவின் தலைநகர். இங்கு வீதிகள் எவ்வளவு விசாலமாகவும், ஒழுங்காகவும் இருக்கின்றன பார். இங்கு துணிகளும் பட்டுச்சேலைகளும் விசேஷமாக நெய்யப்படுகின்றன. ரங்காரியார் என்ற ஜாதியார்கள் இங்கு துணிகளுக்கு நல்ல சாயம் போடுகிறார்கள். வெல்லம் விசேஷமாகச் செய்து வெளியிடங்களுக்கு அனுப்பப்படுகின்றது. இங்கு முனிசிபல் ஹைஸ்கூல் ஒன்று இருக்கிறது. இங்கிருந்து வடக்கே சுமார் 4 மைல் தூரத்தில் உள்ள வாலாஜா ரோட் ரயில்வே ஸ்டேஷனுக்கு ஒரு சாலை செல்லுகிறது.

மறுபடி மேற்கு நோக்கிப் பிரயாணம் செய்தால் சுமார் ஒரு மைலுக்கப்பால் நான்கு சாலைகள் கூடுவதைக் காண்கிறோம். வடக்கே செல்வது வாலாஜா ரோட் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று, பிறகு சோளங்கிபுரம் என்ற ஓர் புண்ணிய க்ஷேத்திரத்தை யடைகிறது. இங்கு வழியில் சில இடங்களில் சிவப்பான மண்ணும், சில இடங்களில் கறுப்பான களிமண்ணுமாக இருக்கிறது. இவ்விடத்தில் உள்ள குன்றில் நரசிம்மசுவாமி கோவில் ஒன்றும், ஆஞ்சநேயர் கோவில் ஒன்றும் இருக்கின்றன. ஏராளமான யாத்ரீகர்கள் அடிக்கடி இங்கு வருவார்கள். இவ்விடத்தில் ஓர் மிடில்ஸ்கூல் இருக்கிறது. சோளங்கிபுரத்திலிருந்து சித்தூருக்கு ஒரு ரஸ்தாவும், அரக்கோணத்துக்கு ஒரு ரஸ்தாவும் செல்லுகின்றன.

மேலே சொன்ன கூட்டு ரோட்டுகளில் நேர்மேற்கே போகும் சாலை சித்தூருக்குச் செல்லுகிறது. இது முகுந்தராயபுரம் என்ற ரயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் ரயில் பாதையைத் தாண்டி லாலாப்பேட்டை என்கிற கிராமத்தின் வழியாகத் திருவலத்துக்குச் செல்கிறது. இவ்வழியில் அநேக இடங்களில் சிவப்பு நிறமான பொட்டல் வெளிகளாக இருக்கின்றன. ஒருகாலத்தில் லாலாப்பேட்டை பெரிய வியாபார ஸ்தலமாக இருந்ததாய்த் தெரிகிறது. திருவலத்தின் சமீபத்தில் பொன்னியாற்றைக் கடக்க ஓர் புதிய வாராவதி கட்டப்படுவதைக் காண்கிறோம். திருவலத்தில் இந்தச்சாலை இரண்டாகப்பிரிந்து, ஒன்று சித்தூருக்கும், மற்றொன்று காட்பாடிக்கும் செல்கின்றன.

வாலாஜாப் பேட்டைக்குச் சமீபத்திலுள்ள கூட்டுரோட்டுகளில் தெற்கே செல்லும் பாதை ராணிப் பேட்டைக்குச் செல்கிறது. இது ஒரு முக்கிய நகரம். செஞ்சிக்கோட்டையின் அரசரான தேசிங்குராஜன் என்பவர், ஆற்காட்டு நவாப்புடன் சண்டையிட்டு இறந்தவுடன் அவருடைய ராணி இங்கு வந்து உடன்கட்டை ஏறியதன் ஞாபகார்த்தமாக இவ்வூருக்கு ராணிப்பேட்டை என்ற பெயர்



பாரி கம்பெனி

இடப்பட்டிருக்கிறது. இவ்வூரில் பாரி கம்பெனியார் திராவகங்கள், ஜாடி, உரம் முதலியவைகள் செய்கிறார்கள் என்று சொன்னோமல்லவா? இவைகளை ரெயில்மூலமாக வெளியிடங்களுக்கு அனுப்புகிறார்கள். இந்தக் கம்பெனியைச் சேர்ந்த அநேக ஐரோப்பியர்கள் இங்குவசிக்கிறார்கள். இங்கே உபாத்தியாயர்களுக்காகப் போதனமுறைப் பாடசாலை ஒன்றும், பாதிரிமார்களால் நடத்தப்படும் சிறந்த ஆஸ்பத்திரி ஒன்றும், சிறு பையன்களாக உள்ள கைதிகளைச் சீர்திருத்த ஓர் தொழிற் பாடசாலையும் இருக்கின்றன. வெள்ளிக்கிழமை தோறும் இங்கு ஒரு பெரிய மாட்டுச் சந்தை கூடுகிறது.

ராணிப்பேட்டை, பாலாற்றின் வடகரையிலிருக்கிறது. இந்த ஆற்றைக் கடக்கச் சிமெண்டினால் கட்டப்பட்ட பாதை ஒன்று இருக்கிறது. இதைக் கடந்து சென்று ஆற்காட்டை யடைகிறோம். இங்கு மோட்டார் பஸ்கள் நிற்பதற்காக எவ்வளவு அழகான கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது பார். இந்த ஊர் முற்காலத்தில் கர்நாடக நவாப் என்ற அரசர்களின் தலைநகராக இருந்தது. பிறகு சுமார் 190 வருஷங்களுக்குமுன் இது கிளைவ் என்ற ஆங்கிலேயரால் பிடிக்கப்பட்டது. இப்பொழுது இவ்விடத்தில் இடிந்த கோட்டையின் பாகங்களும், அங்கங்கே பல அழகிய மசூதிகளும் இருக்கின்றன. பாலாற்றின் கரையோரமாக உள்ள டில்லிகேட் என்னும் கட்டடம் பார்க்கத் தகுந்தது. இங்கே ஓர் ஜில்லாபோர்டு ஹைஸ்கூலும், முகம்மதிய உபாத்தியாயர்களுக்காகஓர் போதனமுறைப்பாடசாலையும் இருக்கின்றன. ஆற்காட்டில், சென்



டில்லிகேட்.

னபட்டணம், காஞ்சிபுரம், அரக்கோணம், திண்டிவனம், ஆரணி, வேலூர் முதலிய இடங்களிலிருந்து வரும் சாலைகள் சந்திப்பதால் இவ்வூர் பெரிய வியாபாரஸ்தலமாக இருக்கிறது. இந்த இடங்கள் எல்லாவற்றிற்கும் இங்கிருந்து பஸ்கள் செல்கின்றன.

ஆற்காட்டில் நான்கு சாலைகள் சந்திக்கின்றன. முதல் சாலை வடக்கே ராணிப்பேட்டைக்கும், இரண்டாவது தெற்கே ஆரணிக்கும், மூன்றாவது தென்கிழக்கே வந்தவாசிக்கும், நான்காவது மேற்கே வேலூருக்கும்

செல்கின்றன. நாம் ஏற்கனவே முதல் சாலை வழியாகத்தான் வந்திருக்கிறோம்.

இரண்டாவது சாலை திமிரி என்ற ஓர் சிற்றூரின் வழியாகச் சென்று ஆரணியை யடைகிறது. திமிரியில் ஓர் இடிந்த கோட்டையின் பாகங்களைக் காண்கிறோம். ஆரணி, கமண்டல நதியின் தென்கரையிலிருக்கிறது. ஆற்றின் வடகரையில் வேலூரிலிருந்து வரும் ரஸ்தாவும் இந்த ரஸ்தாவில் வந்து கலக்கிறது. வேலூரிலிருந்து ஆரணிக்கு வரும் ரஸ்தாவில் **துண்ணத்தூர்** என்ற கிராமம் இருக்கிறது. வெகு நாளைக்கு முன் இது ஒரு ராணுவஸ்தலமாக இருந்தது. இவ்விடம் முகம்மதியர்கள் அதிகமாக வசிக்கிறார்கள். இங்கு நேர்த்தியான பாய்கள் செய்யப்படுகின்றன.

ஆரணி, ஓர் முக்கிய வியாபாரஸ்தலம். நெல் முதலிய தானியங்களும், பட்டுச் சேலைகளும் இங்கிருந்து வெளியிடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இங்கிருந்து சென்னை, வேலூர், ஆற்காடு, வந்தவாசி, சேத்துப்பட்டு, போளூர், திருவண்ணாமலை முதலிய இடங்களுக்கு மோட்டார் பஸ்கள் செல்கின்றன. இங்கு ஒரு ஜில்லா போர்டு ஹைஸ்கூலும், பழைய கோட்டை ஒன்றும் இருக்கின்றன.

ஆரணிக்குச் சுமார் $1\frac{1}{2}$ மைல் கிழக்கில் **சத்யவிஜயநகரம்** என்ற கிராமம் இருக்கிறது. இங்கு மத்வ ஆச்சாரியராகிய சத்ய விஜய சுவாமிகள் சமாதி செய்யப்பட்டிருப்பதால், இவ்வூருக்கு இப்பெயர் வந்தது. இங்கு ஆரணி ஜாகீர்தாருக்குச் சொந்தமான இரண்டு அரண்மனைகள் இருக்கின்றன.

ஆற்காட்டிலிருந்து தென்கிழக்காகச் செல்லும் மூன்றாவது சாலை, வந்தவாசிக்குச் செல்லுகிறது என்று சொன்னோமல்லவா? இச்சாலை ஆற்காட்டிலிருந்து சுமார் 8 மைல் தூரம் சென்றதும், ஒரு கிளைச்சாலை கலவை என்ற ஊருக்குப் போகிறது. இவ்வூரைச்சுற்றி செழிப்பான வயல்களைக் காண்கிறோம். மற்றொரு கிளைச்சாலை பாலாற்றின் தென்கரையிலுள்ள தூசி என்ற கிராமத்திற்குச் சென்று, அங்கிருந்து பாலாற்றைக் கடந்து, காஞ்சிபுரத்துக்குச் செல்லுகிறது. வந்தவாசியை நோக்கி மறுபடி பிரயாணம் செய்தால் செய்யாற்றின் வடகரையிலுள்ள **திருவத்திபுரம்** அல்லது **திருவத்தியூர்** என்ற இடத்தை யடைகிறோம். இவ்வழியில் சாலையைச்சுற்றிச் சில இடங்கள் புதர்களடர்ந்த பிரதேசமாயிருக்கிறது. இது செய்யாறு தாலூகாவின் தலைநகர். இங்கு ஓர் சிறந்த ஆலயம் இருக்கிறது. இங்குப் பட்டுச்சேலைகள் விசேஷமாக நெய்யப்படுகின்றன. இங்கு ஓர் ஜில்லா போர்டு ஹைஸ்கூல் இருக்கிறது. இங்கிருந்து ஒரு சாலை மாமண்டூர், தூசி இவைகள் வழியாகக் காஞ்சிபுரம் செல்லுகிறது. மாமண்டூருக்குச் சமீபத்தில் இந்த ஜில்லாவில் இரண்டாவது பெரிய ஏரி இருக்கிறதென்று சொன்னோமல்லவா? சில குன்றுகளே இந்த ஏரியின் கரைகளாக அமைந்துள்ளன. இந்த ஏரியின் உதவியால் இங்கு நெல் விசேஷமாகப் பயிராகிறது.

திருவத்தியூரைவிட்டுப் புறப்பட்டு, செய்யாற்றைக் கடந்து, சில மைல் தூரம் குன்றுகள், செழிப்பான வயல்கள் இவைகளைப் பார்த்துக் கொண்டே சென்று, வந்தவாசியை யடைகிறோம். இவ்வூர் இப்பெயர் கொண்ட தாலூகாவின் தலைநகர். இங்கு ஒரு பழைய கோட்டையைக் காண்கிறோம். இங்குக் கோரைப்பாய்கள் விசேஷமாக நெய்யப்படுகின்றன என்று முன்பே சொன்னேமல்லவா? இவை விசேஷமாக வெளியிடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இங்கு ஓர் ஜில்லா போர்டு ஹைஸ்கூலும் இருக்கிறது. காஞ்சிபுரம், செங்கல்பட்டு, போளூர், திண்டிவனம், ஆரணி, திருவத்திபுரம், சென்னபட்டணம், அச்சிறுபாக்கம் முதலிய இடங்களிலிருந்து சாலைகள் இங்குக்கூடுவதால் இது ஒரு முக்கிய வியாபார ஸ்தலம். இவ்விடங்களுக்கெல்லாம் இங்கிருந்து மோட்டார் பஸ்கள் செல்லுகின்றன. வந்தவாசிக்கு நேர் மேற்காக உள்ள போளூருக்குச் செல்லும் ரஸ்தாவில் சேத்துப்பட்டு என்றவியாபாரஸ்தலம் ஒன்றைக் காண்கிறோம். இது முற்காலத்தில் முகம்மதிய அரசர்களுடைய ராணுவஸ்தலமாக இருந்தது. இங்கு ஒருபாழடைந்த கோட்டையும் இருக்கிறது. போளூர், வந்தவாசி, ஆரணி, தென் ஆற்காடு ஜில்லாவிலுள்ள செஞ்சி, இவ்விடங்களிலிருந்து ரஸ்தாக்கள் இங்கே கூடுகின்றன. இவ்விடங்களுக்கெல்லாம் மோட்டார் பஸ்கள் செல்லுகின்றன. சேத்துப்பட்டுக்கருகில் தேசூர் என்ற மற்றொருகிராமம் இருக்கிறது. இவ்விடத்தில் நெசவுத் தொழிலும், தோல்பதனிடும் வேலையும் நடக்கின்றன.

ஆற்காட்டிலிருந்து மேற்கே செல்லும் நான்காவது சாலை வேலூருக்குச் செல்லுகிறதென்று சொன்னேமல்லவா? இச்சாலை வழியே செல்லுவோமானால் ஆற்காட்டுக்கு மேற்கே 3½ மைல் தூரத்தில் விஷாரம் என்ற ஊரை யடைகிறோம். இங்கு தனவந்தர்களான முகம்மதிய வியாபாரிகள் பெரும்பாலாக இருக்கிறார்கள். இவர்கள் இவ்வூரில் ஓர் ஹைஸ்கூலை நடத்துகிறார்கள். ஸ்திரீகளுக்கான ஓர் வைத்தியசாலையும், அனாதை முஸ்லீம் பிள்ளைகளை ஆதரித்து, ஆகாரமளித்து, தொழிற் கல்வியும் கற்பிக்க ஒரு விடுதியும் இருக்கின்றன. இவ்விடத்தில் முக்கியமான பயிர் வெற்றிலை.

விஷாரத்துக்கு மேற்கே 11 மைல் தூரம் சென்றால் வேலூரை யடைகிறோம். இந்தச் சாலையில் இரண்டு பக்கங்களிலும் மாந்தோப்புகள் விசேஷமாக இருக்கின்றன. பூமி, மணல் கலந்த சிவப்பு மண்ணையுடையதாயிருக்கிறது. வடக்குப்பக்கத்தை யொட்டி, வழி நெடுகக் குன்றுகள் இருக்கின்றன. வேலூர் இந்த ஜில்லாவுக்குத் தலைநகர். இதைப்பற்றி ஏற்கனவே படித்திருக்கிறோம்.

வேலூரிலிருந்து நான்கு திக்குகளிலும் ரஸ்தாக்கள் செல்லுகின்றன. கிழக்கே செல்லுவதுதான் ஆற்காட்டுக்குச் செல்லும் பாதை. வடக்கே செல்லும் பாதை ஓர் பாலத்தின் வழியாகப் பாலாற்றைக் கடந்து காட்பாடி வழியாகச் சித்தூர் செல்லுகிறது. வேலூரிலிருந்து காட்பாடி வரை இப்பாதை சிமெண்டிலேயே போடப்பட்டிருக்கிறது. காட்பாடியைச் சுற்றி எலுமிச்சந் தோப்புகள்

விசேஷமாக இருக்கின்றன. இங்கு பாதிரிமார்கள் ஓர் தொழிற்சாலையை



விவசாயப்பண்ணை.

யும், விவசாயப் பண்ணையையும் நடத்துகிறார்கள். இந்தப் பண்ணையில் பலவிதமான கோழிகளை ஏராளமாக வளர்க்கிறார்கள். தவிர, நவீனமுறையில் பயிரிடுதல், ஆடு, மாடு, கோழி முதலியவற்றை வளர்த்தல் இவைகளிலும் பயிற்சி யளிக்கிறார்கள். பிரதி சனிக்கிழமையும் இங்கு ஒரு சந்தை கூடுகிறது. சித்தூர், குடியாத்தம், சென்னை, வேலூர் இவ்விடங்களிலிருந்து சாலைகளும், ரயில் பாதைகளும் இங்குச் சந்திப்பதால் இது ஒரு வியாபாரஸ்தலம்.

வேலூரிலிருந்து மேற்கே செல்லும் பாதை வழியாகப் போவோம். சுமார் 5 மைல் தூரம் சென்றவுடன், தென்மேற்காக ஓர் பாதை பிரிந்து, ஒடுகத்தூருக்குச் செல்லுகிறது. இங்கு ஜவ்வாது மலையில் கிடைக்கும் பொருள்கள் விற்கப் படுகின்றன. இங்குக் குளிர் ஜுரம் அடிக்கடி ஏற்படுவதால் ஜனத்தொகை மிகவும் குறைவு.

வேலூருக்கு மேற்கேசுமார் 8மைல் தூரத்தில், ரஸ்தாவுக்கு இரண்டு பர்லாங்கு வடக்கே விரிஞ்சிபுரம் என்ற ஓர் க்ஷேத்திரம் இருக்கிறது. இங்கு ஓர் பெரிய அழகிய கோவில் இருக்கிறது. கார்த்திகை மாதம் ஞாயிற்றுக் கிழமைகளில் இங்கு விசேஷமாக ஜனங்கள் சுவாமி தரிசனத்துக்கு வருகிறார்கள்.

விரிஞ்சிபுரத்துக்கு மேற்கே சுமார் ஆறுமைல் தூரத்தில் பள்ளிகொண்டை என்னும் ஊரை அடைகிறோம். இவ்வூருக்குச் சமீபத்தில் தான் கௌண்டியநதி பாலாற்றுடன் கலக்கிறது. இங்குள்ள அழகிய கோவிலில் ஸ்ரீ ரங்கநாதர் பள்ளிகொண்டிருப்பதால் இவ்வூருக்குப் பள்ளிகொண்டை என்று பெயர் வந்தது. இங்கு வெற்றிலை விசேஷமாகப் பயிரிடுகிறார்கள். இங்கிருந்து ஓர் பாதை பிரிந்து, பாலாற்றைக்கடந்து குடியாத்தத்தை யடைகிறது.



ஸ்ரீ ரங்கநாதர் ஆலயம்.

மறுபடியும் மேற்கே நோக்கிப் பிரயாணம் செய்தால் **ஆம்பூரை** யடைகிறோம். இது வேலூர் தாலூகாவில் இரண்டாவதான பெரிய நகரம். இங்கு முகமதியர்கள் விசேஷமாக இருக்கிறார்கள். இவர்கள் பல இடங்களில் வியாபாரம் செய்கிறார்கள். ஊரைச்சுற்றிலும் தென்னை, மா, முதலிய மரங்கள் விசேஷமாக இருக்கின்றன. அநேகத் தோல் பதனிடும் சாலைகளையும் காண்கிறோம். இவ்விடத்தில் ஹிந்துக்களுக்காக ஒன்றும், முகம்மதியர்களுக்காக ஒன்றும், கிறிஸ்தவர்களுக்காக ஒன்றும் ஆக மூன்று ஹைஸ்கூல்கள் இருக்கின்றன.

ஆம்பூரிலிருந்து வடக்காக ஓர் ரஸ்தா செல்வதைக் கவனி. இவ்வழியாகச் சென்றால் சுமார் 12 மைல் தூரத்தில் **பேரணம்பட்டு** என்ற ஊரை யடைகிறோம். இங்கும் முகம்மதியர்கள் அதிகம், இவர்களில் அநேகர் தோல் பதனிடும் தொழிலை நடத்துகிறார்கள். வெல்லம், பழுப்புச் சர்க்கரை இவைகளும் இங்குச் செய்யப்படுகின்றன. இவ்வூருக்குத் தென்கிழக்கே சுமார் 8மைல் தூரத்திலுள்ள மெயில்பட்டி ரயில்வே ஸ்டேஷன் இவ்வூருக்குப் போக்குவரவுக்காக உபயோகப்படுகிறது.

பேரணம்பட்டுக்குக்கிழக்கே சுமார் $1\frac{1}{2}$ மைல் தூரத்தில் **சாத்துக்குடி** என்ற கிராமம் இருக்கிறது. இது ஆரஞ்சிப்பழங்களுக்குப் பெயர் பெற்றது. இப்பழம் இப்பொழுது இந்த ஜில்லாவில் பல இடங்களில் பயிரிடப்படுகிறது. இப்பழம் உடம்புக்கு மிகவும் நல்லது.

ஆம்பூருக்கு மேற்கே 10 மைல் தூரத்தில் **வாணியம்பாடி** என்ற ஓர் பெரிய வியாபாரஸ்தலம் இருக்கிறது. இங்கும் முகம்மதியர்கள் அதிகம். இவர்கள் இங்கு ஒரு காலேஜையும், ஒரு ஹைஸ்கூலையும் நடத்துகிறார்கள். பாலாறு இவ்விடத்தில் இரண்டாகப் பிரிந்து, மறுபடியும் ஒன்று சேருகிறது. சுமார் 35 வருஷங்களுக்குமுன் ஏற்பட்ட ஓர் பெரிய வெள்ளத்தில் இவ்வூரில் பல பாகங்கள் அடித்துக்கொண்டு போகப்பட்டன. இவைகளை மறுபடியும் அழகாகக் கட்டியிருக்கிறார்கள். இங்குத் தோல் பதனிடும் சாலைகள் அனேகம் இருக்கின்றன.

வாணியம்பாடியில் சாலை இரண்டாகப் பிரிகிறது. ஒன்று சேலம் ஜில்லாவிலுள்ள கிருஷ்ணகிரி வழியாகப் பெங்களூருக்கும், மற்றொன்று **ஜோலார்பேட்டை** வழியாகத் **திருப்பத்தூருக்கும்** செல்கின்றன. இன்னொரு சிறு சாலை ஆலங்காயம், மோட்டூர் வழியாகவும் திருப்பத்தூருக்குச் செல்லுகிறது. திருப்பத்தூர் இப்பெயரையுடைய தாலூகாவின் தலைநகர். இது ஒரு பெரிய வியாபாரஸ்தலம். துவரை, புளி, வெல்லம், காட்டுச்சாமான்கள் இவைகள் இங்கிருந்து வெளியிடங்களுக்கு



ஆஸ்பத்திரி.

அனுப்பப்படுகின்றன. இங்கு ஒரு முனிசிபல் ஹைஸ்கூலும், பாதிரிமார்களால் நடத்தப்படும் ஓர் ஆஸ்பத்திரியும் இருக்கின்றன. திருப்பத்தூரில் சாலை, பல பிரிவுகளாகப் பிரிந்து, சேலம் ஜில்லாவில் பல இடங்களுக்குச் செல்லுகின்றன.

வேலூரிலிருந்து தெற்கே ஓர் ரஸ்தா செல்வதாகச் சொன்னோமல்லவா? இச்சாலை வழியாகச்சென்றால் சுமார் 20 மைலுக்குத் தெற்கே, தென் கிழக்காக ஓர் கிளைப்பாதை சென்று ஆரணியை யடைகிறது. மற்றும் சுமார் 20 மைல் தூரம் பிரயாணம் செய்தால் **போளூரை** யடைகிறோம். வழி நெடுக அநேக குன்றுகளைக் காண்கிறோம். போளூர் இப்பெயர் கொண்ட தாலூகாவின் தலைநகர். இங்கு இரண்டு குன்றுகளுக்கு மத்தியில் ஓர் ஏரி கட்டித் தண்ணீரைத் தேக்கிப் பயிரிடுகிறார்கள். ஜவ்வாது மலையில் உற்பத்தியாகும் பொருள்கள் இங்கு விற்பனைக்குக்கிடைக்கின்றன. இங்கு ஒரு ஜில்லா போர்டு ஹைஸ்கூல் இருக்கிறது. இங்கிருந்து வட கிழக்கே ஆரணிக்கு ஒரு சாலையும், கிழக்கே சேத்துப்பட்டு வழியாக வந்தவாசிக்கு ஒரு சாலையும் செல்லுகின்றன.

போளூருக்குத் தெற்கே 19 மைல் தூரத்தில் **திருவண்ணாமலை** இருக்கிறது. இது இந்தத் தாலூகாவின் தலைநகர். இவ்விடத்தில் பெயர் பெற்ற அருணாசல ஈஸ்வரர் ஆலயம் இருக்கிறது. சமீபத்திலுள்ள குன்றில் கார்த்திகைத்தீபம் ஏற்றுவார்கள். அச்சமயம் இங்கு ஏராளமான கூட்டம் கூடும். அப்பொழுது இங்கு ஒரு மாட்டுச் சந்தையும் நடைபெறும். இங்கு அநேக தர்மச் சத்திரங்களும்,



திருவண்ணாமலை.

இரண்டு ஹைஸ்கூல்களும் இருக்கின்றன. ஒன்று பாதிரிமார்களாலும், மற்றொன்று முனிசிபாலிட்டியாராலும் நடத்தப்படுகின்றன. பக்த அருணகிரி நாதர் பிறந்த இடம் இதுவே. இவ்வூருக்கருகிலுள்ள குன்றில் ரமணமகரிஷி என்ற மகான் ஒருவர் இருக்கிறார். இவரைத்தரிசிக்க வெளி நாடுகளி லிருந்தும் அநேகர் வருகிறார்கள்.

திருவண்ணாமலையி லிருந்து கிழக்கே தென்னாற்காடு ஜில்லாவைச் சேர்ந்த செஞ்சிக்கு ஒரு ரஸ்தாவும், தெற்கே விழுப்புரத்துக்கு ஒரு ரஸ்தாவும், மேற்கே செங்கம் வழியாகச் சேலம் ஜில்லாவுக்கு ஒரு ரஸ்தாவும் செல்கின்றன. செங்கம் அந்தத் தாலூகாவின் தலைநகர். இதற்குச் சமீபத்திலுள்ள செங்கம்மாக் கணவாயின்வழியாகத்தான் சேலத்துக்குச் செல்லும் பாதை போகின்றது. இங்கு ஜவ்வாது மலையில் கிடைக்கும் பொருள்கள் விற்பனையாகின்றன. இங்கு ஒரு ஜில்லா போர்டு ஹைஸ்கூல் இருக்கிறது.

இதுவரை நாம் பிரயாணம் செய்தவை முக்கிய ரஸ்தாக்கள். இவைகளைத் தவிர அநேக சிறிய ரஸ்தாக்களும் இருக்கின்றன.

பயிற்சிக் கேள்விகள்.

1. உங்கள் கிராமத்திலிருந்து உங்கள் தாலூகாவின் தலைநகருக்குச் செல்லும் ரஸ்தா எந்தெந்த ஊர்கள் வழியாகச் செல்கிறது?
2. உங்கள் ஊரில் தேவையான துணி, கண்ணுடி, புஸ்தகங்கள் முதலியவை சமீபத்திலுள்ள எந்த நகரத்தில் கிடைக்கின்றன?
3. நீங்கள் வேலூருக்குச் சாலைமார்க்கமாகப் போக விரும்பினல் எந்தெந்த ஊர்கள் வழியாகச் செல்லவேண்டும்?
4. நீங்கள் கார்த்திகைத்தீபத்திற்காகத் திருவண்ணாமலைக்கு மோட்டாரிலேயே போக விரும்பினல் எந்தெந்த ஊர்கள் வழியே செல்லவேண்டும்?
5. கீழ்க்கண்ட இடங்கள் எந்த விதத்தில் முக்கியமானவை? (1) சோளங்கிபுரம் (2) ராணிப்பேட்டை (3) ஆரணி (4) சாத்துக்குடி (5) காட்பாடி.
6. ஆற்காட்டிலிருந்து நான்கு சாலைகள் எந்தெந்த இடங்களுக்குச் செல்லுகின்றன?
7. திருவண்ணாமலையைப்பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.
8. பள்ளிகொண்டைக்கு ஏன் அப்பெயர் வந்தது?
9. வந்தவாசியிலிருந்து எந்தெந்த இடங்களுக்கு ரஸ்தாக்கள் செல்லுகின்றன?
10. கீழ்க்கண்டவைகளுக்கு விடை கூறுக:-

i. பழைய கோட்டைகள் உள்ள இடங்கள்.
ii. க்ஷேத்திரங்கள்.
iii. பல ரஸ்தாக்கள் கூடுமிடங்கள்.
iv. முகம்மதியர்கள் அதிகமாக வசிக்கும் நகரங்கள்.
v. தாலூகாக்களின் தலைநகர்கள்.

ரயில் மார்க்கங்கள்.



ரயில் வண்டித் தொடர்.

இதுவரை நமது ஜில்லாவில் பல பாகங்களை ரஸ்தாக்களின் வழியாக மோட்டாரில் சென்று பார்வையிட்டோமல்லவா! ரஸ்தாவைத் தவிர, நமது ஜில்லாவில் பல இடங்களுக்கு ரயில் வண்டித் தொடரும் செல்லுகின்றன. மோட்டாரைவிட ரயில் வண்டிகளில் குறைந்த செலவில் அதிக சீக்கிரத்திலும், சௌகரியத்துடனும் பிரயாணம் செய்யலாம்.

நமது ஜில்லாவில் கிழக்கு மேற்காக ஓர் இருப்புப்பாதையும், தெற்கு வடக்காக ஓர் இருப்புப் பாதையும் செல்வதைக் கவனியுங்கள். இவை இரண்டும் எந்த இடத்தில் சந்திக்கின்றன? சென்னை, பெங்களூர் ரஸ்தா, கிழக்கு மேற்காகச் செல்லும் இருப்புப்பாதை இவைகள் பெரும்பாலும் பாலாற்றை யொட்டியே செல்லுகின்றன. ஏன்?

கிழக்கு மேற்காகச் செல்லும் ரயில் பாதைக்கும், தெற்கு வடக்காகச் செல்லும் ரயில்பாதைக்கும் முக்கிய வித்தியாசம் ஒன்று உண்டு. கிழக்கு மேற்குப் பாதையில் உள்ள இரண்டு தண்டவாளங்களுக்கு மிடையில் உள்ள தூரம் 5 அடி 6 அங்குலம்.

இதற்கு அகலப்பாதை (பிராட் கேஜ்) என்று பெயர். இப்பாதை சென்னை தென் மஹாராஷ்டிர இருப்புப்பாதைக் கம்பெனியாருக்குச் சொந்தம். தெற்கு வடக்காகச் செல்லும் பாதையில் இரண்டு தண்டவாளங்களுக்குமிடையேயுள்ள தூரம் ஒரு மீட்டர் அதாவது 3 அடி 3 அங்குலம். ஆகையால் இதற்கு மீட்டர் கேஜ் ரயில்பாதை என்று பெயர். இப்பாதை தென்னிந்திய இருப்புப்பாதைக் கம்பெனியாருக்குச் சொந்தம்.

கிழக்கு மேற்குப் பாதையில் முதலில் பிரயாணம் செய்வோம். இப்பாதை சென்னையிலிருந்து பெங்களூர் முதலிய இடங்களுக்குச் செல்லுகிறது. இந்த இருப்புப்பாதை எந்தத் தாலூகா வழியாக நமது ஜில்லாவில் பிரவேசிக்கிறது பாருங்கள். நமது ஜில்லாவின் ஆரம்பத்தில் இருக்கும் ஸ்டேஷன் மோசூர் என்பது. இதற்கு அடுத்தது தான் அரக்கோணம் ஸ்டேஷன். இது ஒரு பெரிய ரயில்வே சந்திப்பு. (ஜங்ஷன்) இந்த ஸ்டேஷன் எவ்வளவு பெரிதாக இருக்கிறது பார். இங்கிருந்து கிழக்கே சென்னைக்கும், வடமேற்கே பம்பாய்க்கும், தென்கிழக்கே காஞ்சிபுரத்திற்கும், மேற்கே காட்பாடிக்கும் ரயில் பாதைகள் செல்லுகின்றன. இவ்வூரில் ஓர் பெரிய ரயில்வேத் தொழிற்சாலையும், பாதிரிமார்கள் நடத்தும் ஓர் ஹைஸ்கூலும் இருக்கின்றன.

அரக்கோணத்திலிருந்து காஞ்சிபுரம் செல்லும் பாதையில் முதல் ஸ்டேஷன் தக்கோலம். இவ்வூரில் ஓர் சிவாலயம் இருக்கிறது. இதன் மதிற் சுவரில் ஓர் கல் நந்தியின் வாயிலிருந்து சுத்தத் தண்ணீர் எப்பொழுதும் வழிந்து கொண்டே இருக்கிறது. இவ்வூரில் நெசவுத் தொழிலும் விசேஷமாக நடக்கிறது. அரக்கோணத்தைவிட்டு மேற்கே பிரயாணம் செய்தால் முன்னல் என்ற சிறு ஸ்டேஷன் இருக்கிறது. இங்கும் நெசவுத்தொழில் விசேஷமாக நடக்கிறது. இதைத் தாண்டிச் சோளங்கிபுரம் ஸ்டேஷனை (ஷோளிங்கர்) அடைவோம். சோளங்கிபுரம் கோவில்களைப்பற்றி முன்னமேயே படித்தோம் அல்லவா? அவைகளுக்கும், இந்த ஸ்டேஷனுக்கும் சுமார் 8 மைல் தூரம் இருக்கிறது. இந்த ஸ்டேஷனுக்குச் சமீபத்திலுள்ள கிராமம் பாணவரம் என்பது.

படத்தைப் பார்த்து, சோளங்கிபுரத்துக்கு அடுத்த ஸ்டேஷன் எது என்று சொல்லுங்கள். அதற்கு அடுத்தது வாலாஜா ரோட் ஸ்டேஷன். இதற்குச் சமீபத்தில் அம்மூர் என்ற கிராமம் இருக்கிறது. வாலாஜா ரோட் ஓர் ரயில்வே சந்திப்பு. இங்கிருந்து தெற்கே 4 மைல் தூரத்திலுள்ள ராணிப்பேட்டைக்கு ஒரு கிளைப்பாதை செல்லுகிறது. இப்பாதை முக்கியமாக ராணிப்பேட்டையிலுள்ள பாரி கம்பெனியாருக்காக ஏற்பட்டது.

பிறகு முகுந்தராயபுரம், திருவலம் இவைகளைத் தாண்டிக் காட்பாடியையடைகிறோம். திருவலத்தின் சமீபத்தில்ரயில்பாதைஒருபாலத்தின்வழியாகப் பொன்னையாற்றைக் கடக்கிறது. காட்பாடி ஒரு முக்கிய ரயில்வே சந்திப்பு.இங்கிருந்து சென்னை,சித்தூர், திருவண்ணமலை, பெங்களூர் முதலிய இடங்களுக்கு 4 இருப்புப்பாதைகள் செல்கின்றன. சித்தூர் செல்லும் மீட்

டர்கேஜ் இருப்புப்பாதை சென்னை தென் மகாராஷ்டிர இருப்புப்பாதைக் கம்பெனியாருக்குச் சொந்தமானது.

காட்பாடியை விட்டுப் புறப்பட்டு லத்தேரியைத் தாண்டி, விரிஞ்சி புரத்தை யடைகிறோம். இந்த ஸ்டேஷனிலிருந்து இப்பெயர் கொண்ட க்ஷேத்திரம் தெற்கே சுமார் 5 மைல் தூரத்தில் இருக்கிறது. அடுத்த ஸ்டேஷன் காவனூர். இங்கிருந்து சுமார் 8 மைலுக்கு வடக்கே மஹா தேவமலை என்ற க்ஷேத்திரம் இருக்கிறது. இங்கு ஒரு சிவன் கோவில் இருக்கிறது. செங்கல்பட்டுக்குச் சமீபத்திலுள்ள திருக்கழுக்குன்றத்துக்கு வரும் இரண்டு கழுகுகள் தினந்தோறும் மஹாதேவமலைக்கும் வருகின்றன.

அடுத்த ஸ்டேஷன் குடியாத்தம். இந்த ஸ்டேஷனுக்கும், குடியாத்தம் நகருக்கும் சுமார் 4 மைல் தூரம் இருக்கிறது. பிறகு மேலாலத்தூர், வளத்தூர் ஸ்டேஷன்களைத்தாண்டி மெயில்பட்டிக்கு வருகிறோம். இங்கு ரயில்பாதை பாலாற்றைத் தாண்ட ஓர் இருப்புப்பாலம் கட்டியிருக்கிறார்கள். மெயில்பட்டியிலிருந்து பேரணம்பட்டுக்கு ஒரு ரஸ்தா செல்கிறதென்று சொன்னோமல்லவா?

பிறகு ஆம்பூர், விண்ணமங்கலம், வாணியம்பாடி, கேதாண்டபட்டி இவைகளைத்தாண்டி ஜோலார்பேட்டையை யடைகிறோம். இது ஒரு ரயில்வே சந்திப்பு. இங்கிருந்து சென்னை, பெங்களூர், சேலம் இவைகளுக்கு இருப்புப்பாதைகள் செல்கின்றன. சேலத்துக்குச் செல்லும் பாதை தென்னிந்திய ரயில்பாதைக் கம்பெனிக்குச் சொந்தமான பிராட் கேஜ்பாதை. இதில் ஜோலார்பேட்டைக்கு அடுத்த ஸ்டேஷன் திருப்பத்தூர். இதுவும் ஓர் ரயில் சந்திப்பு. இங்கிருந்து சேலம் ஜில்லாவிலுள்ள கிருஷ்ணகிரிக்கு ஓர் குறுகிய இருப்புப் பாதை செல்கிறது. திருப்பத்தூரிலிருந்து தெற்காகச் செல்லும் ரயில் பாதை காகங்கரை வழியாகச் சேலம் ஜில்லாவுக்குள் பிரவேசிக்கிறது.

காட்பாடியிலிருந்து தெற்காக ஓர் இருப்புப்பாதை செல்வதைப் பார். இது காட்பாடியிலிருந்து மேற்கே சுமார் ஒரு மைல் தூரம் வரை பெங்களூர் பாதையை யொட்டிச் சென்று பிறகு அந்தப் பாதையை ஓர் பாலத்தின் வழியாகத் தாண்டித் தெற்கே செல்கிறது. சுமார் 3 மைல் தூரம் சென்றவுடன், ஓர் இருப்புப் பாலத்தின் வழியாகப் பாலாற்றைக் கடந்து வேலூருக்கு வந்து சேருகிறது. வேலூர் டவுன், வேலூர் கண்டோன்மெண்டு, பென்னாத்தூர் இந்த ஸ்டேஷன்களைத் தாண்டி, கணியம்பாடிக்கு வருகிறோம். கணியம்பாடிக்கும், கண்ணமங்கலத்துக்கும் மத்தியில் அநேக குன்றுகளுக்கிடையே ரயில்பாதை வளைந்து வளைந்து செல்கின்றது. பிறகு ஒண்ணுபுரம், சேதாரம்பட்டு ஸ்டேஷன்களைத் தாண்டி ஆரணி ரோட் ஸ்டேஷனுக்கு வருகிறோம். இங்கிருந்து கிழக்கே சுமார் 6 மைல் தூரத்திலுள்ள ஆரணிக்கு ஒரு ரஸ்தா செல்லுகிறது. ஆரணி ரோட்டுக்குச் சமீபத்தில் உள்ள கிராமம் களம்பூர். இங்கு விவசாயமும், நெசவுத்தொழிலும் விசேஷமானவை. இங்குள்ள ஏரியைப்பற்றி முன்னமேயே படித்திருக்கிறோம்.

ஆரணி ரோட்டை விட்டுப் புறப் பட்டு, மாதிமங்கலம் என்ற ஸ்டே ஷனைத் தாண்டி, போளூரை யடை கிறோம். போளூருக்கும், இதற்குத் தெற்கே 19 மைல் தூரத்திலுள்ள திருவண்ணாமலைக்கு மிடையே வேறு மூன்று ஸ்டேஷன்கள் இருக்கின் றன. படத்தைப்பார்த்து, இவைகள் எதுவெதுஎன்றுசொல்லுங்கள். திரு வண்ணாமலையை யடைவதற்குச்சில மைல் தூரம் முன்பேயே அவ்வூர் மலையைக்காண்கிறோம். பிறகு வேளா நந்தல், தண்டரை ஸ்டேஷன்களைத் தாண்டி, தென் ஆற்காடு ஜில்லாவிற் குள் பிரவேசிக்கிறோம்.

பயிற்சிக் கேள்விகள்.

1. உங்கள் ஊருக்குச் சமீபத்திலுள்ள ரயில்வே ஸ்டேஷன் எது?
2. மீட்டர்கேஜ், பிராட்கேஜ் இப்பாதை களுக்கு என்ன வித்தியாசம்? உங்கள் ஊருக்குச் சமீபத்தில் எந்தப் பாதை இருக்கிறது?
3. ஒருவன் அரக்கோணத்திலிருந்து, செங் கத்திற்கு முதலில் ரயிலிலும், பிறகு மோட்டாரிலும் போக விரும்பினால், அவன் செல்ல வேண்டிய வழியைப் படத்தைப் பார்த்துச் சொல்.
4. நமது ஜில்லாவிலுள்ள ரயில்வே சந்திப்பு (ஜங்ஷன்) கள் எவை?
5. மஹாதேவமலை எவ்விதத்தில் முக்கிய மானது? இதற்குச் சமீபத்திலுள்ள ரயில் வே ஸ்டேஷன் எது?
6. பேரணம்பட்டு, ஆரணி இவைகளுக்குச் செல்ல, முறையே சமீபத்திலுள்ள எந் தெந்தஸ்டேஷன்களில்இறங்கவேண்டும்?

பதினான்காம் பாடம்.

ஜில்லா சரித்திரச் சுருக்கம்.

வெகு காலத்திற்கு முன் நமது ஜில்லா முழுவதும் காடுகளாக இருந் ததாய்ச் சொல்லப்படுகிறது. பிறகு சில ஜனங்கள் வந்து, இக்காடுகளை யழித்து, கிராமங்களை ஏற்படுத்தினார் கள். கொஞ்ச காலத்திற்குப் பிறகு காஞ்சிபுரத்தை யாண்ட பல்லவர்கள் என்ற வம்சத்தினர், நமது ஜில் லாவை யாண்டு வந்தார்கள். பிறகு தென்னாட்டிலுள்ள சோழர்கள் என்ற வம்சத்தினர் இதைஜெயித்து, இந்நாட்டிற்குத் தொண்டைமண்ட லம் என்று பெயரிட்டார்கள்.

சோழர்களுக்குப் பிறகு விஜயநக ரத்து அரசர்களும், மஹாராஷ்டிர அரசரான சிவாஜியும் ஒருவர் பின் ஒருவராக நமது ஜில்லாவை யாண்டு வந்தார்கள்.பிறகு சுமார் 250வருஷங் களுக்குமுன் டில்லியை யாண்ட முக லாயர்கள் தென்னிந்தியாவைக்கைப் பற்றினார்கள். அச்சமயம் நமது ஜில்லாவையும், சுற்றியுள்ள இடங் களையும் ஆளுவதற்கு ஆற்காட்டில் ஓர் நவாபை நியமித்தார்கள். இப் பிரதேசத்திற்குக் கர்நாடக ராஜ்யம் என்று பெயரிட்டார்கள்.

சுமார் 190 வருஷங்களுக்கு முன் அன்வாருதீன் என்ற கர்நாடக நவாப் சண்டையில் இறந்தவுடன், அவருடைய குமாரரான முகம்மதலி என்பவருக்கும், சந்தாசாகேப் என்ற மற்றொருவருக்கும் ஆற்காட்டைப் பற்றிச் சண்டை யுண்டாயிற்று. ஆங்கிலேயர்கள், முகம்மதலிக்கு உதவிசெய்து அவரை ஆற்காட்டுக்கு நவாப் ஆக்கினார்கள். முகம்மதலி, சிலகாலம் ஆற்காட்டை யாண்டுவிட்

டுப் பிறகு இறந்தார். அவருடைய சந்ததியார்கள் சரியாக ஆளாததால் சுமார் 138 வருஷங்களுக்குமுன் ஆங்கிலேயர்கள், அவர்களுக்கு உபகாரச்சம்பளம் கொடுத்துவிட்டு, கர்நாடக ராஜ்யத்தைத் தங்கள் வசமாக்கிக் கொண்டார்கள்.

பதினைந்தாம் பாடம்.

அரசாங்கமுறை.

நம் தேசம் ஆங்கிலேயர்களால் ஆளப்பட்டு வருகிறது என்று உங்களுக்குத் தெரியுமல்லவா? இங்கிலாந்திலுள்ள ஆரும் ஜார்ஜ் என்பவர் இப்பொழுது நமது சக்கரவர்த்தி. அவர் தமக்குப் பிரதிநிதியாக இந்தியாவை ஆள ஒரு வைசிராயை நியமித்திருக்கிறார். அவர் இருப்பிடம் வடக்கேயுள்ள டில்லிநகர். அவருக்குக் கீழ் ஒவ்வொரு மாகாணத்தையும் ஆளுபவர் கவர்னர் எனப்படுவார்.

ஒவ்வொரு மாகாணமும் அநேக ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஜில்லாவின் அதிகாரிக்குக் கலெக்டர் என்று பெயர். இவருடைய முக்கிய வேலைகளில் ஒன்று ஜில்லாவின் நிலவரி வசூல்களைக் கவனிப்பது. ஒவ்வொரு தாலூகாவுக்கும் உள்ள அதிகாரிக்குத் தாசில்தார் என்று பெயர். இரண்டு மூன்று தாலூகாக்களை மேற்பார்வையிடும் உத்தியோகஸ்தருக்கு சப்கலெக்டர் என்றும், டெப்டிகலெக்டர் என்றும் பெயர். இவர்களின் அதிகாரத்துக்குட்பட்ட பிரிவுக்கு டிவிஷன் என்று பெயர். நமது ஜில்லாவைக் கீழ்க்கண்ட டிவிஷன்களாகப் பிரித்திருக்கிறார்கள்:-

டிவிஷன்	அடங்கிய தாலூகாக்கள்.	மேற்பார்வை உத்தியோகஸ்தர்.
1. வேலூர்	வேலூர் தாலூகா, ஆரணி ஜாகீர்.	டெப்டிகலெக்டர்.
2. திருப்பத்தூர்	திருப்பத்தூர், குடியாத்தம்.	சப்கலெக்டர்.
3. திருவண்ணாமலை	திருவண்ணாமலை, செங்கம், போளூர்.	டெப்டி கலெக்டர்.
4. ராணிப்பேட்டை	அரக்கோணம், வாலாஜா.	டெப்டி கலெக்டர்.
5. செய்யாறு	செய்யாறு, வந்தவாசி.	டெப்டி கலெக்டர்.

தாசில்தாருக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்கள் ரெவினியூ இன்ஸ்பெக்டர், கிராம முனிசீப், கர்ணம் இவர்கள். இவ்வதிகாரிகள் சர்க்காருக்குச் சேர வேண்டிய நிலவரி முதலியவைகளை வசூலித்துக்கணக்குகள்வைத்துக் கொள்ளவேண்டியது.

நியாயவிசாரணை இலாகா:-இதற்குத் தலைவர் ஜில்லா ஜட்ஜ். நமது ஜில்லாவின் தலைநகராகிய வேலூரில் ஜில்லா ஜட்ஜ் இருக்கிறார். இவருக்குக்கீழ், கொடுக்கல் வாங்கல், நிலசுவாதீனம் இவைகளைப் பற்றிய வழக்குகளை விசாரிக்க சப்ஜட்ஜ், முனிசீப், கிராமப் பஞ்சாயத்துக் கோர்ட்டுகளும், அடிதடிகளவு, கொலை முதலிய வழக்குகளை விசாரிக்கப்பல மாஜிஸ்டிரேட்டுகளும் இருக்கிறார்கள்.

போலீஸ் இலாகா:-இதற்குத்தலைவர் ஜில்லா போலீஸ் சூபரிண்டென்டென்ட் என்பவர். இவருக்குக்கீழ் டெப்டிசூபரிண்டென்டென்டு, சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர், கானிஸ்டேபிள் இவர்கள். இவர்களது வேலை நாட்டில் கலகம் இல்லாமல் சமாதானமும், அமைதியும் இருக்கும்படி பார்த்துக் கொள்வது.

கல்வி இலாகா:-இதன் தலைவர் ஜில்லாக் கல்வியதிகாரி. இவருக்குக் கீழ் டெப்டி இனிஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். பள்ளிக்கூடங்கள் நன்றாக நடைபெறுகின்றனவா என்பதைக் கவனிப்பது இவர்கள் வேலை.

இவைகளைத் தவிர தபால் தந்தி இலாகா, காட்டு இலாகா, உப்பு இலாகா, சுகாதார இலாகா, வைத்திய இலாகா, பத்திரப்பதிவு இலாகா மராமத்து இலாகா, என்ற வேறு பல இலாகாக்களும் இருக்கின்றன.

இவைகளைத் தவிர ஜனங்களே பரிபாலிக்கும்படி சில அதிகாரங்கள் அவர்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இதற்கு ஸ்தல சுய ஆட்சி என்று பெயர் இந்த அதிகாரங்களைச் செலுத்த ஜில்லாபோர்டு, முனிசிபாலிடி, யூனியன் போர்டு என்ற சபைகள் இருக்கின்றன.

ஜில்லா போர்டு:-இந்தச் சபையின் முக்கிய வேலைகள் ஜில்லாவில் ரோட்டுகள் போடுவது, கல்வியைப் பெருக்குவது, சுகாதாரத்தைக் கவனிப்பதுமாகிய இவைகள்.

முனிசிபாலிடி:-இவைகள் பெரிய நகரங்களிலுள்ள சபைகள். சுகாதாரம், குடிக்கும் தண்ணீர் வசதி செய்வது, ரோடுகள், விளக்குகள் இவைகள் போடுவது, கல்வி அபிவிருத்தி செய்வது இச்சபைகளின் வேலைகள். நமது ஜில்லாவில்வேலூர், வாலாஜா, திருவண்ணாமலை, குடியாத்தம், திருப்பத்தூர், வாணியம்பாடி இவைகள் முனிசிபாலிடிகளையுடைய பட்டணங்கள்

சிறிய பட்டணங்களிலுள்ள யூனியன் போர்டுகளும் மேற்படி வேலைகளைச் செய்கின்றன. நமது ஜில்லாவில் அநேக யூனியன்கள் இருக்கின்றன

பயிற்சிக் கேள்விகள்.

1. நமது சக்கரவர்த்தியின் பெயர் என்ன?
2. கலெக்டர், ஜில்லாக் கல்வி யதிகாரி, போலீஸ் இலாகா உத்யோகஸ்தர்கள் இவர்கள் அதிகாரங்கள் என்ன?
3. ஜில்லாபோர்டு, முனிசிபாலிடி, இவைகள் எதற்காக ஏற்பட்டிருக்கின்றன?

பதினாறும் பாடம்.

முக்கிய பட்டணங்கள்.

நமது ஜில்லாவில் 10 தாலூகாக்களும், ஒரு ஜாகீரும் இருப்பதாகச் சொன்னோமல்லவா? இவைகளிலுள்ள முக்கிய பட்டணங்களைப் பற்றி இப்போது படிப்போம்.

அரக்கோணம் தாலூகா.

இது ஜில்லாவின் கிழக்குக் கோடியிலுள்ளது. இது பெரும்பாலும் சமவெளியாக உள்ளது. பூமி சில இடங்களில் களிமண்ணாகவும், சில இடங்களில் மணல் பாங்காகவும் இருக்கிறது. வடக்குப்பாகத்தில் நிலக்கடலை, சோளம், கம்பு, கேழ்வரகு முதலிய தானியங்களும், தெற்குப் பாகத்தில் நெல்லும் முக்கிய விளைபொருள்கள். இதன் ஜனத்தொகை 1, 86, 374. இதன் தலைநகர் அரக்கோணம். இது ஒரு முக்கிய ரயில்வே சந்திப்பு.

காஞ்சிபுரம், சென்னை, பம்பாய், காட்பாடி முதலிய இடங்களுக்குச் செல்லும் பாதைகள் இங்குச் சந்திக்கின்றன. இவ்வூரில் ஒரு பெரிய ரயில்வே தொழிற்சாலையும் இருக்கிறது. இவ்வூர் ஒரு பெரிய யூனியன்.

முக்கியஊர்கள்.

காவேரிப் பாக்கம்:-இவ்விடத்தில் ஒரு பெரிய ஏரி இருப்பதாகச் சொன்னேமல்லவா? இதன் நீளம் சுமார் 4 மைலும், அகலம் சுமார் 1½ மைலும் இருக்கின்றன. இதிலிருந்து சுற்றுப்பட்ட அநேக கிராமங்களுக்குத் தண்ணீர் பாய்கிறது. இதிலிருந்து குசஸ்தலையாறு என்ற ஓர்சிற்ருறு புறப்பட்டு செங்கல்பட்டு ஜில்லா வழியே சென்று கடலில் கலக்கின்றது. இவ்வூரில் ஓர் ஜில்லாபோர்டு ஹைஸ்கூல்இருப்பதாகச் சொன்னேமல்லவா?

மகேந்திரவாடி:-இந்தக் கிராமம் காவேரிப்பாக்கத்துக்கு வடக்கே சுமார் 7 மைல் தூரத்தில் இருக்கிறது. இங்கும் ஓர் சிறிய ஏரி இருக்கிறது. இதற்குப்பாலாற்றிலிருந்து தண்ணீர் வருகிறது. **பனப்பாக்கம்,** நெமிலி, இவ்விடங்களில் நெசவுத் தொழில் விசேஷம்.

தக்கோலம்:-இது அரக்கோணத்திலிருந்து காஞ்சிபுரம் செல்லும் இருப்புப் பாதையில் அரக்கோணத்துக்கு அடுத்த ஸ்டேஷன். இங்குக்கோவில் மதிலிலுள்ள கல் நந்தியின் வாயிலிருந்து தண்ணீர் வந்துகொண்டேயிருக்கிறது.

வாலாஜாபேட்டை தாலூகா.

இது அரக்கோணம் தாலூகாவுக்கு மேற்கேயும், தென்மேற்கேயுமுள்ளது. இதன் ஜனத்தொகை 2, 56, 370. இது மிகவும் செழிப்பானதும், கைத்தொழில் நிறைந்ததாயுமுள்ள தாலூகா. இத்தத் தாலூகாவில் வெவ்வேறு இடங்களில் முற்காலத்திய ரிஷிகளில் ஆறு பெயர்கள் ஆச்சிரமத்தைக் கட்டிக்கொண்டிருந்தார்கள். ஒவ்வொன்றைச் சுற்றிலும் முன்னர் காடுகள் இருந்தபடியால் இப்பாகத்துக்கு ஆற்காடு (ஆறுகாடு) என்று பெயர் வந்தது. இதன் தலைநகர் வாலாஜாபேட்டை. இங்கு வஸ்திரங்கள் பட்டுச்சேலைகள், வெல்லம் முதலியன செய்யப்படுகின்றன.

சோளங்கிபுரம்:-இது ஒரு சிறந்த ஸ்தலம். இங்குச்செங்குத்தானகுன்றுகளில் நரசிம்மசுவாமி கோவில் ஒன்றும், ஆஞ்சநேயர் கோவில் ஒன்றும் இருக்கின்றன. ஆகையால் யாத்ரிகர்கள் விசேஷமாக வருகிருர்கள். இங்கு ஒரு மிடில்ஸ்கூலும், முனிசீப் கோர்ட்டும் இருக்கின்றன.

பொன்னை:-இது இந்தத் தாலூகாவின் வடகோடியிலுள்ளது. இதன் சமீபத்தில் பொன்னையாற்றுக்கு ஓர் அணைக்கட்டு இருக்கிறது.

ராணிப்பேட்டை:-இவ்வூர் பாலாற்றின் வடகரையிலுள்ளது. இங்குப் பாரி கம்பெனியார் உரம், ஜாடி முதலியவைகள் செய்கிருர்கள். இங்கு வெள்ளிக்கிழமை தோறும் கூடும் சந்தையில் ஆடு, மாடுகள், வஸ்திரங்கள், தோல், காய்கறிகள், பாய்கள், பலசரக்குகள் எல்லாம் விற்பனையாகின்றன.

இவ்வூருக்கு மேற்கே நவ்லாக்பாக் என்ற ஒன்பதுலக்ஷம் மரங்களடங்கிய பெரிய தோப்பு ஒன்று இருக்கிறது.

கலவை:- இது ஆற்காட்டுக்குத் தென்கிழக்கே சுமார் 9 மைல் தூரத்திலுள்ளது. இங்கு வெற்றிலையும், நெல் முதலிய தானியங்களும் விசேஷமாகப் பயிராகின்றன.

ஆற்காடு:- இது பாலாற்றுக்குத் தென் கரையிலுள்ளது. இது முன் காலத்தில் கர்நாடக நவாப்புகளின் தலை நகராக இருந்ததால் இங்கு இப்பொழுதும் இடிந்த கோட்டைகளின் பல பாகங்கள் இருக்கின்றன. இது ஒரு யூனியன். பல சாலைகள் இங்குக் கூடுவதால் இது ஒரு முக்கிய வியாபாரஸ்தலம்.

திமிரி:- இது ஆற்காட்டுக்குத் தெற்கேயுள்ளது. இங்குப் பாழடைந்த கோட்டையொன்று இருக்கிறது.

விஷாரம்:- இது ஆற்காட்டுக்கு மேற்கே $3\frac{1}{2}$ மைல் தூரத்திலுள்ளது. இங்கு முகம்மதிய வியாபாரிகள் அதிகம். இவர்கள் ஒரு ஹைஸ்கூலை நடத்துகிறார்கள். இது ஒரு யூனியன். இங்கு வால்மீகி ரிஷியின் கோவில் இருக்கிறது.

வேப்பூர்:- இது ஆற்காட்டுக்கு மேற்கே 2 மைல் தூரத்திலுள்ளது. இங்கு வசிஷ்ட ரிஷியின் கோவில் இருக்கிறது.

செய்யாறு தாலூகா.

இது அரக்கோணம் தாலூகாவுக்குத் தெற்கேயுள்ளது. இதுவும் மிகச் செழிப்பாக உள்ளது. இதன் ஜனத்தொகை 1,75,764. இதன் தலைநகர் **திருவத்திபுரம்.** இதையே திருவத்தியூர், அல்லது செய்யாறு என்றும் சொல்வதுண்டு. இது செய்யாற்றின் வட கரையிலுள்ளது. இங்கு வேதபுரீசுவரர் கோவில் விசேஷமானது.

முக்கிய ஊர்கள்.

மாமண்டூர்:- இங்கு ஒரு ஏரி இருப்பதாகச் சொன்னோமல்லவா? இதன் கரை குன்றுகளாலேயே அமைந்துள்ளது. இக் குன்றுகளில் முன்காலத்தில் பல உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன.

அனக்காவூர்:- இது செய்யாற்றின் தென் கரையிலுள்ளது. இங்கு வஸ்திரங்கள் நெய்யப்படுகின்றன.

வந்தவாசி தாலூகா.

இது செய்யாறு தாலூகாவுக்குத் தென்மேற்கேயுள்ளது. இங்குச்செம்மண் நிறைந்த பூமி அதிகம். புன்செய்ப் பயிர்கள் விசேஷமாக உண்டாகின்றன. கோரையும் விசேஷமாக உண்டாவதால் பாய் முடையும் தொழில் இங்கு அதிகம் என்று சொன்னோமல்லவா? இதன் ஜனத்தொகை 1,93,044. இதன் தலை நகர் வந்தவாசி. இது ஒரு யூனியன். இங்குப் பல சாலைகள் கூடுவதால் வியாபாரம் விசேஷமாக நடக்கிறது. இங்குச் சரித்திர சம்பந்தமான கோட்டைகளின் இடிந்த பாகங்கள் காணப்படுகின்றன.

முக்கிய ஊர்கள்.

தெள்ளாறு:- இது வந்தவாசிக்குத் தெற்கே யுள்ளது. இங்கு நெசவுத் தொழில் விசேஷம்.

தேசூர்:-தெள்ளாற்றுக்கு வடமேற்கே இவ்வூர் உள்ளது. இங்கு வஸ்திரங்கள் நெய்தல், தோல் பதனிடுதல் முக்கியமான தொழில்.

ஆரணி ஜாகீர்.

இது நமது ஜில்லாவில் மிகவும் ஜன நெருக்கமுள்ள பாகம் என்று சொன்னோமல்லவா? செய்யாறு, கமண்டலநதி, நாகநதி இவைகள் இத்தாலூகா வழியாகச் செல்வதால் இது மிகச் செழிப்பாக உள்ளது. இது ஒரு ஜாகீர். இதன் ஜனத்தொகை 1,40,633. ஆரணி, இது வஸ்திரங்களுக்கும், பட்டுச் சேலைக்கும், வியாபாரத்துக்கும் பெயர் போனது. இங்குப் பல சாலைகள் சந்திக்கின்றன.

முக்கிய ஊர்கள்.

துண்ணத்தூர்:-இங்கு முகம்மதியர்கள் அதிகம். அநேகர் பாய்முடையும் தொழிலை மேற்கொண்டிருக்கிறார்கள்.

கண்ணமங்கலம்:-இது வேலூர், திருவண்ணாமலை இருப்புப்பாதையில் உள்ளது. இது ஒரு வியாபார ஸ்தலம்.

தேவிகாபுரம்:-இது இந்த ஜாகீரின் தெற்கிலுள்ள ஒரு சிற்றூர். இங்கு ஓர் சிறந்த கோவில் மலைமீது கட்டப்பட்டிருக்கிறது.

சத்திய விஜயநகரம்:-இது ஆரணிக்குக்கிழக்கே கமண்டலநதிக்கரையிலுள்ளது. இங்கு ஜாகீர்தாரின் இரண்டு அரண்மனைகள் இருக்கின்றன.

வேலூர் தாலூகா.

இது மேற்குப்பாகத்தில் மலையடர்ந்ததும், கிழக்குப் பாகத்தில் கொஞ்சம் சம வெளிகளையுடையதுமான பிரதேசம். இம்மலைகளில் காடுகள் விசேஷம். இத்தாலூகாவுக்கும், குடியாத்தம் தாலூகாவுக்கும் பாலாறு எல்லையாக அமைந்திருப்பதைக் கவனி. வடக்கிலும், கிழக்கிலும் பூமி மிகச் செழிப்பானது. நன்செய்ப் பயிர்கள், மாம்பழம், வெற்றிலை இவை விசேஷமாக உண்டாகின்றன. இதன் ஜனத்தொகை 2,59,372. இதற்குத் தலைநகர் வேலூர். இது இந்த ஜில்லாவுக்கும் தலைநகர்.

இது பாலாற்றுக்கு எந்தக் கரையிலுள்ளது பாருங்கள். இங்குள்ள கோட்டைக்குள் ஜில்லா ஆபீசுகளில் அநேகம் இருக்கின்றன. இது பெரிய வியாபாரஸ்தலம். இங்கு நான்கு ஹைஸ்கூல்களும், ஒரு காலேஜும், இரண்டு பெரிய ஆஸ்பத்திரிகளும், ஒரு சிறைச்சாலையும் இருக்கின்றன.

முக்கிய ஊர்கள்.

ஆம்பூர்:-இது இந்தத் தாலூகாவில் இரண்டாவதான பெரிய நகரம். இங்குமுகம்மதியர்கள் அதிகம். தோல் பதனிடுதல் முக்கியமான தொழில். இதைச் சுற்றியுள்ள பூமி அதிக சாரமுள்ளது. பயிர்கள் விசேஷமாக இருக்கின்றன. இப் பட்டணத்தில் சுமார் 200 வருஷங்களுக்குமுன் ஓர் பெரிய யுத்தம் நடந்தது.

சத்துவாச்சாரி:-இது வேலூரையடுத்துக் கிழக்கிலிருக்கிறது. நெசவுத் தொழில் விசேஷம்.

பள்ளிகொண்டை:-இது பாலாற்றின் தென்கரையிலுள்ளது. இதற்குச் சமீபத்தில்தான் கௌண்டின்ய நதி பாலாற்றுடன் கலக்கிறது. இங்கு ரங்கநாதர்கோவில் ஒன்று உண்டு.

விரிஞ்சிபுரம்:-இது பாலாற்றின் தென்கரையிலுள்ளது. இங்கு ஒரு சிறந்த சிவன்கோவில் உள்ளது. சுவாமியின் பெயர் மார்க்கபந்து. கார்த்திகை ஞாயிற்றுக்கிழமைகளில் இங்கு ஏராளமான யாத்ரிகர்கள் வருவார்கள்.

ஒடுகத்தூர்:-இது வேலூருக்குத் தென்மேற்கேயுள்ளது. இங்கு மலைக் காடுகளில் கிடைக்கும் பொருள்கள் விற்கப்படுகின்றன.

குடியாத்தம் தாலூகா.

இது வேலூர் தாலூகாவுக்கு வடக்கேயுள்ளது. இதன் தெற்குப் பாகத்தில் பாலாறு பாய்வதாலும், வண்டல்மண் நிறைந்த பூமியாயிருப்பதாலும் மிகச் செழிப்பாக இருக்கிறது. நன்செய்ப்பயிர்களாகிய நெல்,கரும்பு இவைகள் விசேஷமாக உள்ளன. வடக்குப்பாகம் மணல் நிறைந்த செம்மண் பூமி. இங்கு மா, ஆரஞ்சு முதலிய பழமரங்கள் விசேஷம். இதன் ஜனத்தொகை 2,37,636. இதன் தலைநகர் குடியாத்தம். இது கௌண்டின்ய நதிக்கரையில் இருக்கிறது. இங்குச் செவ்வாய்க் கிழமைகளில் விசேஷமாக சந்தை கூடுகிறது.

முக்கிய ஊர்கள்.

பேரணம்பட்டு:-இங்கு முகம்மதியர்கள் விசேஷம். இவர்களின் முக்கியமான தொழில் தோல் பதனிடுதல். இங்கு வெல்லமும், பூராச்சர்க்கரையும் செய்கிறார்கள். இங்குக் கிச்சலி முதலிய பழமரங்களும் விசேஷம். முகம்மதியர்கள் இவ்வூரில் ஒரு மிடில் ஸ்கூலை நடத்துகிறார்கள்.

காட்பாடி:-இது முக்கிய ரயில்வே சந்திப்பு. சென்னை, பெங்களூர், திருவண்ணாமலை, சித்தூர் போகும் பாதைகள் இங்குச் சந்திக்கின்றன. பலசாலைகளும் இங்குக் கூடுவதால்



விவசாயப்பண்ணை

இது பெரிய வியாபாரஸ்தலம். இங்குப் பாதிரிமார்கள் நடத்தும் தொழிற்சாலையும், விவசாயப் பண்ணையும் இருக்கின்றன.

மகாதேவமலை:-இது காவனூர் ஸ்டேஷனுக்கு வடக்கேயுள்ளது. இங்கிருக்கும் கோயிலுக்குத் திருக்கழுக்குன்றத்துக்கு வரும் கழுகுகள் தினமும் வருகின்றன.

சாத்துக்குடி:-இவ்வூர் பேரணம்பட்டுக்குக் கிழக்கேயுள்ளது. இவ்வூரைச் சுற்றி ஆரஞ்சுத் தோப்புகள் விசேஷம்.

திருப்பத்தூர் தாலூகா.

இது இந்த ஜில்லாவின் மேற்குக் கோடியிலுள்ளது. இங்கு மலைகளும், மேட்டுப் பூமிகளும் அதிகம். சம

வெளிகளில் துவரை விசேஷமாகப் பயிரிடுகிறுர்கள். மலைக்காடுகளில் கிடைக்கும் சந்தனம், தேக்கு, கருங்காலி முதலிய மரங்களும், தோல் பதனிட உதவும் மரப் பட்டைகளும், தேன், மெழுகு, கடுக்காய், மூலிகைகள் இவைகளும் இங்கு விசேஷம். சந்தனமரங்களை வாங்க, பம்பாய், வட இந்தியாவிலுள்ள ஆஜ்மீர் முதலிய இடங்களிலிருந்தும் வியாபாரிகள் வருகிறுர்கள். இதன் ஜனத்தொகை 2,56,917. இதற்குத் தலைநகர் திருப்பத்தூர். இங்கு சப்கலெக்டர் வசிக்கிறுர். சுமார் 150 வருஷங்களுக்கு முன் இந்நகரே சேலம் ஜில்லாவின் தலைநகராக இருந்தது.

முக்கிய ஊர்கள்.

வாணியம்பாடி:-இது நமது ஜில்லாவில் ஐந்தாவது பெரிய பட்டணம். இது ஒரு முனிசிபாலிட்டி. இங்கு லப்பைகள் என்ற முகம்மதியர்கள் விசேஷம். இவர்கள் சென்னை, பெங்களூர் முதலிய இடங்களில் விசேஷமாகத் தோல் வியாபாரம் செய்கிறுர்கள். இவர்கள் இங்கு ஒரு காலேஜையும், ஒரு ஹைஸ்கூலையும் நடத்துகிறுர்கள். இவ்வூருக்குச் சமீபத்தில் பாலாறு இரண்டாகப்பிரிந்து மறுபடி ஒன்று கூடுகிறது.

ஜோலார்பேட்டை:-இது ஒரு ரயில்வே சந்திப்பு. சேலம், பெங்களூர், சென்னை இவ்விடங்களுக்குச் செல்லும் ரயில் பாதைகள் இங்குச் சந்திக்கின்றன. இவைகளைப் படத்தில் பாருங்கள்.

ஆலங்காயம்:-இங்கு மலைக்காடுகளில் கிடைக்கும் பொருள்களை விற்பனைக்குக் கொண்டுவருகிறுர்கள்.

மோட்டூர்:-இங்கு ஆட்டுரோமத்தால் கம்பளங்கள் நெய்யப்படுகின்றன.

போளூர் தாலூகா.

இது வேலூர் தாலூகாவுக்குத் தெற்கேயுள்ளது. இதன் வடக்குப் பாகம் மேட்டுப் பிரதேசமாகவும், தெற்குப் பாகம் சமவெளியாகவும் இருக்கின்றன. செய்யாறும், அதன் உபநதிகளும் இந்தத் தாலூகாவின் வழியாகப் பாய்கின்றன. இவைகளைத் தவிர இங்கு அநேக கிணறுகளும் தோண்டியிருக்கிறுர்கள். ஆகவே இங்குச் சாகுபடி விசேஷமாக நடக்கிறது. இதன்ஜனத்தொகை 2,07,406. இதன் தலைநகர் போளூர். இவ்வூருக்கு மேற்கே இரண்டு குன்றுகளில் குறுக்காக அணைகட்டித் தண்ணீரைத் தேக்கிப் பயிரிட உபயோகிக்கிறுர்கள். இவ்வூரில் மலைக்காடுகளில் விளையும் பொருள்கள் வியாபாரம் செய்யப்படுகின்றன.

முக்கிய ஊர்கள்.

சேத்துப்பட்டு:-இது இந்தத் தாலூகாவின் தென்கிழக்கு மூலையில் உள்ள ஓர் வியாபாரஸ்தலம். இங்கு அநேக சாலைகள் சந்திக்கின்றன. இங்கு ஒரு இடிந்த கோட்டை இருக்கிறது.

களம்பூர்:-இது ஆரணி ரோட் ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் இருக்கிறது. இங்குள்ள ஏரியின் உதவியால் சாகுபடி விசேஷமாக நடக்கிறது.

ஆத்வாம்பாடி:-இங்கு ஆட்டுரோமத்தினுல் கம்பளங்கள் நெய்கிறுர்கள்.

திருவண்ணாமலை தாலூகா.

இது போளூருக்குத் தெற்கேயுள்ளது. சிற்சில குன்றுகளைத் தவிர மற்ற இடங்களெல்லாம் இங்குச் சமவெளிகளே. இங்குள்ள கரிசல்மண் மிகவும் செழிப்பானது. புன்செய்ப்பயிர்கள் விசேஷமாகப் பயிராகின்றன. இதன் ஜனத்தொகை 2,05,419. திருவண்ணாமலை இதற்குத் தலைநகர். இது இந்த ஜில்லாவில் இரண்டாவது பெரிய பட்டணம். இங்குள்ள கோயில்கள் முதலிய வற்றைப்பற்றிப் படித்தோமல்லவா? இங்கு யாத்ரிகர்கள் தங்க அநேக சத்திரங்கள் இருக்கின்றன. இங்கு ரமணமகரிஷி என்ற பெரியார் இருக்கிறார். அவரைத் தரிசிக்க வெளிநாடுகளி லிருந்தும் பலர் வருகின்றனர். பக்த அருணகிரிநாதர் பிறந்த இடம் இதுவே. இந்தத் தாலூகாவில் வேறு முக்கிய பட்டணங்கள் அதிகம் இல்லை.

செங்கம் தாலூகா.

இது திருவண்ணாமலை தாலூகாவுக்கு மேற்கேயுள்ளது. இது சுமார் 9 வருஷங்களுக்கு முன்தான் தனித் தாலூகாவாக ஏற்பட்டது. இதற்கு முன் இது திருவண்ணாமலை தாலூகாவிலேயே அடங்கியிருந்தது. இந்தத் தாலூகாவின் வடக்குப்பாகத்தில் செய்யாறும், தெற்குப்பாகத்தில்பெண்ணையாறும் ஓடுகின்றன. இத் தாலூகாவில் சிற்சில இடங்களில் குன்றுகள் இருக்கின்றன. இங்குச் செம்மண் கலந்த பூமி அதிகம். புன்செய்ப் பயிர்கள் விசேஷமாக விளைகின்றன. இதன் ஜனத்தொகை 1,48,054. செங்கம் இத்தத் தாலூகாவின் தலைநகர். இது செங்கம்மா கணவாய்க்குச் சமீபத்தில் இருப்பதால் முக்கியமாயிற்று. இக்கணவாயின் வழியாகத்தான் சேலம் ஜில்லாவுக்கு ஒரு சாலை செல்லுகின்றது. இவ்வூரில் ஜவ்வாது மலைக்காடுகளில் கிடைக்கக்கூடிய பொருள்கள் விற்பனைக்குக் கொண்டு வரப்படுகின்றன. இதைத் தவிர இந்தத் தாலூகாவில் முக்கிய பட்டணம் புதுப்பாளையம். இங்குக் கம்பளங்கள் விசேஷமாக நெய்யப்படுகின்றன.

பயிற்சிக் கேள்விகள்.

1. ஆற்காட்டுக்கு ஏன் இப்பெயர் வந்தது?
2. மகேந்திரவாடி, கலவை, தேவிகாபுரம், இவ்விடங்களைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?
3. குடியாத்தம், வேலூர் தாலூகாக்களுக்கு மத்தியில் இயற்கையாக உள்ள எல்லை எது?
4. செங்கம் ஏன் அந்தத் தாலூகாவில் ஓர் முக்கிய பட்டணமாக இருக்கிறது?
5. ஆற்காடு எப்பொழுது கர்நாடக இராஜ்யத்தின் தலைநகர மாயிற்று?
6. சுமார் எவ்வளவு வருஷங்களுக்கு முன் கர்நாடக இராஜ்யம் ஆங்கிலேயர் வசம் வந்தது? ஏன்?



பதினேழாம்பாடம்.

உலகவிஷயங்கள்.

சிறுவர்களே! நாம்வசிக்கும் ஜில்லாவானது பூகோளத்தின் ஒரு சிறு பகுதி என்பதை அறிந்து கொள்ளுங்கள். பூமியானது ஒரு உருண்டை வடிவமாக இருக்கிறது. அதனுடைய மத்திய பாகத்தின் சுற்றளவு சுமார் 25,000 மைல்கள் ஆகும். இப்பெரிய உருண்டையின் பெரும்பாலானபாகங்கள் தண்ணீர் நிறைந்த சமுத்திரத்தால் சூழப்பட் டிருக்கின்றன. மற்ற இடங்கள் ஜனங்கள் வசிப்பதற்குரிய பூ பாகமாக இருக்கின்றன. பூமியை இரண்டு பாகங்களாகப் பிரித்திருக்கிருர்கள். கிழக்குப் பாகத்தில் மேற்குப் பாகத்தை விடப் பூ பாகம் அதிகமாயிருக்கிறது.

பூமியின் பெரியபாகங்கள் கண்டங்கள் என்று சொல்லப் படுகின்றன. அக் கண்டங்களாவன:-

(1) ஆசியா (2) ஐரோப்பா (3) ஆப்ரிக்கா (4) ஆஸ்திரேலியா (5) அமெரிக்கா என்பனவாம்.

இவற்றுள் முதல் நான்கு கண்டங்கள் கிழக்குப் பாகத்திலும், ஐந்தாவதான அமெரிக்கா என்ற பெரிய கண்டம் மேற்குப் பாகத்திலும் அமைந்துள்ளன. அமெரிக்கா பெரிய பூபாகமாக இருப்பதால் இது வட அமெரிக்கா என்றும், தென் அமெரிக்கா என்றும் பிரிக்கப்பட்டிருக்கிறது.

பூபாகத்தைச் சுற்றியுள்ள சமுத்திரங்கள் ஐந்து:-அவைகள் முறையே பசிபிக் மகா சமுத்திரம், அட்லாண்டிக் மஹா சமுத்திரம், இந்து மஹா சமுத்திரம், உத்தர மஹா சமுத்திரம், தக்ஷிண மஹா சமுத்திரம் என்று சொல்லப்படும். ஒவ்வொரு கண்டத்திலும் தேசமென்று வழங்கும் சிறு பூபாகங்கள் அநேகம் இருக்கின்றன. நாம் வசிக்கும் இடமானது பூமியின் கிழக்குப் பாகத்திலுள்ள ஆசியாக்

கண்டத்தில் இந்தியா என்னும் தேச மாகும். நமது தேசத்திற்குத் தெற்கே யுள்ளது இந்து மஹா சமுத்திரம் எனப்படுவதே.

சிறுவர்களே! நாம் ஆகாயவிமான மொன்றில் ஏறிக்கொண்டு பூமியைச்



ஆகாய விமானம்

சுற்றி வருவோமானுல், அநேக ஆயிரம் அடிகள் உயரம் சென்றவுடன் நாம் பலவிதக் காட்சிகளைக் காணலாம். முதன் முதலாகப் பூமியின் மட்டமானது மிகவும் மேடு பள்ளமாயிருப்பது தெரியும். வட ஆற்காடு ஜில்லாவிலிருந்து வடக்கு முகமாகச் சென்ருல் நமது தேசத்தின் வடக்கு எல்லையான இமயமலைக்கு வருவோம்.



இமயமலைச் சிகரம்

வழியில் அநேக ஆறுகளும், பட்டணங்களும், காடுகளும், மலைகளும் காணப்படுகின்றன. வடக்கே செல்லச் செல்ல, உஷ்ணம் மிகவும் குறைவாகவும், குளிர்ச்சி அதிகமாகவும் இருப்பதை உணரலாம். அங்கிருந்து இன்னும் வடக்கே சென்ருல் மத்திய ஆசியாவின் பல மலைகளும், பல ஆறுகளும், பல பீட பூமிகளும் காணப்படும். இன்னும் வடக்கே



புல்வெளி மைதானம்

சென்ருல் புல் நிறைந்த மிகவும் விசாலமான மைதானங்கள் கண்களுக்குப் புலப்படுகின்றன. அவ்விடத்தில் பெரும்பாலும் ஜனங்கள் ஆடுமாடுகளை மந்தை மந்தையாய் வளர்த்து ஜீவனம் செய்கிருர்கள்.

மேலும் சிறிது வடக்கே சென்ருல் பூமியானது அதிக சீதளமாகவும், பனியினுல் மூடப்பட்டும் காணப்



எஸ்கிமோ வீடு

படுகிறது. இவ்விடத்தில் எஸ்கிமோ என்னும் ஜாதியார் பனிக்கட்டிகளால் வீடு கட்டிக்கொண்டு பிராணிகளின் தோலை உடையாக அணிந்துகொண்டிருப்பதைக் காணலாம்.

இவைகளை யெல்லாம் பார்த்து விட்டு, இன்னும் சிறிது வடக்கே சென்றால் வட துருவத்துக்கு வரலாம். வடதுருவமானது எப்பொழுதும் பனிக்கட்டிகளினால் மூடப்பட்டிருக்கிறது. இங்கு வருஷத்தில் ஆறு மாதம் வெளிச்சமாகவும், ஆறு மாதம் இருட்டாகவும் இருக்கிறது. இருட்டுக் காலங்களில் அங்கிருக்கும் ஜனங்கள் தெற்கே சென்றுவிடுகிறார்கள்.

இதனைக்கடந்து அப்புறம் சென்றால் மறுபடியும், ஆசியாவின் பின்புறத்திலுள்ள வடக்கு மகா சமுத்திரத்திற்கு வரலாம். அங்கிருந்து தெற்கு முகமாகத்திரும்பினால் மறுபடியும் ஆச்சரியங்களையே காணலாம். இப்போது வட அமெரிக்காவுக்கு வந்துசேருகிறோம்.வட ஆசியாவைப் போல் இவ்விடத்திலும் பனிக்கட்டிகள் திரள் திரளாகப் பூமியின் மேல் படிந்திருக்கின்றன. இங்கிருந்து தெற்கே சென்றால், கானடா என்னும் தேசத்திலுள்ள அநேகஆறுகளையும், ஏரிகளையும் காணலாம்.

இன்னும் அதற்குத்தெற்கே சென்றால் ஐக்கிய நாடுகளுக்கு வந்து சேருகிறோம். இவ்விடத்தில் பெரிய ஆறுகளும், மலைகளும், காடுகளும் இருக்கின்றன. இவ்விடத்தில் குடியிருப்பவர்கள் ஐரோப்பியர்கள். சில இடங்களில், இவ்விடத்தின் ஆதிக்குடிகளான செவ்விந்தியர்களைக்காணலாம். ஐக்கிய நாடுகளில் பல விடங்களில் ஆப்ரிக்காவிலிருந்து பல நூற்றாண்டுகளுக்கு முன் கொண்டு வரப்பட்ட நீக்ரோஜாதியினர் வசித்து வருவதைப் பார்க்கலாம்.

திரும்பவும் தெற்கு நோக்கிப் பிரயாணம் செய்தால் பூமியானது வர வரக்குறுகி இரண்டு பக்கங்களிலும் சமுத்திரங்களால் உட் செல்லப்பட்டு அமெரிக்கா கண்டமானது இரண்டாகப் பிரிபடுவது நன்கு விளங்கும்.

இன்னும் தெற்கு நோக்கிச் சென்றால் தென் அமெரிக்கா வந்து சேரலாம். அவ்விடத்தில் பல அடர்ந்த காடுகளிருக்கின்றன. உலகத்தில் மிக அகலமும், ஆழமுமான அமெஜான் நதி இங்கு ஓடுகிறது. கடைசியாக கேப்ஹார்ன் என்னும் தென் அமெரிக்காவின் தெற்குக் கோடி முனைக்கு வருகிறோம்.

இங்கிருந்து அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தின் வழியாக மத்திய ஆப்ரிக்காவுக்குச் செல்வோம். நடுவழியில் நூற்றுக்கணக்கான தீவுகளைக் காணலாம். தண்ணீரால் சூழப்பட்ட சிறு பூபாகங்களுக்குத் தீவுகள் என்று பெயர். மத்திய ஆப்ரிக்காவில்மலைகள், பீடபூமிகள், ஆறுகள், ஏரிகள் இவை ஏராளமாக இருக்கின்றன. அவ்விடத்திலுள்ள காடுகளில் காண்டாமிருகம், யானை, சிங்கம் முதலிய மிருகங்கள் மிகுதியாக இருப்பதைக் காணலாம். இந்நாட்டு ஜனங்கள் கறுப்பு நிறத்தையுடைய நீக்ரோவர். இப்பிரதேசத்திலும் அநேக ஐரோப்பியர்கள் குடியேறி இருப்பதைப் பார்க்கலாம்.

இதற்குச் சிறிது வடக்கே சென்றால் உலகத்திலுள்ள பெரிய நதிகளில் ஒன்றான நைல் நதியைக் காணலாம். இதற்கு மேற்காக ஸஹாரா என்னும் பெரியபாலைவனம்தோன்றுகிறது. இங்கிருந்து கிழக்கு முக

மாகப் பிரயாணம் செய்தால் இந்து மஹா சமுத்திரத்தையும், அதன் மத்தியிலுள்ள பல தீவுகளையும் கடந்து ஆஸ்திரேலியா என்னும் கண்டத்துக்கு வரலாம். இதன் மேற்குப் பாகங்களில் அநேக தங்கச்சுரங்கங்கள் இருக்கின்றன. இதில் ஆங்கிலேயர்கள் குடியேறி வசிக்கின்றனர். இங்குச் சில விசித்திரமான மரங்களும், பிராணிகளும் இருக்கின்றன.



ஆஸ்திரேலியா தங்கச் சுரங்கம்

ஆஸ்திரேலியாவின் மேற்குப் பாகத்திலும் ஒரு பெரிய பாலைவனம் இருக்கிறது.

இதுவரை நாம் செய்துவந்த சுற்றுப் பிரயாணத்தில் மிகவும் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய கண்டம் ஒன்றை இன்னும் பார்க்கவில்லை. இதுதான் ஐரோப்பாக் கண்டமாகும். மறுபடியும் ஆகாய விமானத்திற் கிளம்பி அரபிக்கடலைக் கடந்து, ஆப்பிரிக்காவுக்கும், ஐரோப்பாவுக்கும் மத்தியில் உள்ள மத்திய தரைக் கடலுக்கு வந்து சேருவோம். இங்கிருந்து கவனித்தால் ஐரோப்பாக் கண்டத்தைக் காணலாம். இங்கு மிக்க நாகரிகம் பெற்ற பல தேசங்கள் இருக்கின்றன. இதன் மத்தியில் ஆல்ப்ஸ் என்ற உயர்ந்த மலை இருக்கிறது. அதனுடைய சிகரங்கள் எப்பொழுதும் பனியால் மூடப்பட்டிருக்கின்றன. ஐரோப்பாக் கண்டத்தில் **பாரிஸ், லண்டன், ம்யூனிக், ரோம், பர்லின், லெனின், கிராட்** முதலிய உலகப் பிரசித்திபெற்ற பெரிய நகரங்களைக் காணலாம். இக்கண்டத்தில் பல இடங்களில் பெரிய கைத்தொழில் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறுன பல உலகக் காட்சிகளைப் பார்த்துவிட்டு, மறுபடியும் நமது தேசத்திற்குத் திரும்புவோம்.

பயிற்சிக் கேள்விகள்.

1. கண்டங்கள் என்றால் என்ன? பூமியில் எத்தனை கண்டங்கள் இருக்கின்றன? அவற்றின் பெயர்கள் என்ன? நமது தேசம் எந்தக் கண்டத்தில் இருக்கின்றது?
2. நமது தேசத்தை யடுத்திருப்பது எந்த மஹா சமுத்திரம்?
3. எஸ்கிமோ ஜாதியாரைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?
4. ஆஸ்திரேலியாவில் எந்த உலோகம் விசேஷமாகக் கிடைக்கிறது?
5. ஐரோப்பாவில் உலகப் பிரசித்தி பெற்ற சில பட்டணங்களின் பெயரைக் கூறுக?

முற்றிற்று.

EXCELSIOR ·
POWER PRESS
MADURA